
GOKULAM

கோகுலம்

ரூ.6/-

ஏப்ரல் 2004




SEMAS
All Brain Development Courses
in an Umbrella
Fast track
3 in 1 Package
for Kids
for Adults
memory lifter
mind mapping
speed reading
Duration 12 months
Brain Gym
Short term
for children
Long term
International certification courses for adult
Doctors
Physiotherapist
Athletes
Sport Coaches
Students
Graduates
Parents
Teachers
Abacus education
Short term
4 years to 6 years old
Duration 6 months
14 years old and above
Duration 18 months
Long term
4 years old and above
Duration 30 months
2months Summer course also available
SEMAS
Explores the Child's talent
School of brainy child
Short term
Infancy & toddler
For normal & brain injured children
Neuro Linguistic Program
Long term
International certification courses for adult
Doctors
Physiotherapist
Athletes
Sport Coaches
Professionals
Managers
Graduates
Teachers
Students
Short term
for children
We are @ Sowcarpet-31093174, Saligramam-23760810, Madipakkam-22530670, Adambakkam-55392460, Chrompet-22412544, K.K.Nagar-24722505, Mogappair-26259155, Nanganallur-56149000, Ullagaram-56106202, Velachery-22530243, T.Nagar-24358560, Ambattur-26571002, Periamagar-56142836, Porur-24829066, Guindy-32599982, Kodambakkam-24731526, Purasaiwakkam-31142983, Avadi-Main-26340830, Avadi-33308595, Kovilpatty-04632226349, Madurai-K.K.Nagar-2584441, Devakottai-9894391049, Thiruchengode-283553, Kalpakkam-286036, Kancheepuram-233324, Karaikudi 227030, Rasipuram-2251379, Salem-Ammapet, Fairlands-2268854, Namakkal-Mohanur Road-220471, Dindugal-9443108595, Erode-Kalukadimedu-2263820, Pudukottai-268171, Hosur-221934, Gudiyatham-9443390365, Pallikonda-244472, Ranipet-9443118541, Vellore-Town, Gandhi Nagar, Sathuachary-2220809, Thiruppathur-9443294581, Walajapet-230380, Arakkonam-243243, Thirupur-2215577, Pallipalayam-9843340657, Karur-9894030471, Sivaganga-232538, Hydrabad-9849882618, Maredpally-27741703, Mumbai-9820428997, Trichy-Cantonment-24100012, BHEL, HAPP-9443112597, Madurai-2584441, Namakkal -0427-2448406, Salem- 2252529, Pondichery-2240935, Vellore-944-3188645, Thiruvallur-Mangadu-9841-330330, Coimbatore-3121372, Metupalayam - 9842256075, Bangalore-080-23643877, Indira Nagar(Adyar)-044-58151717
SEMAS Pvt. Ltd.
545, 14th St., 4th Sector, K.K.Nagar, Chennai-78 Ph. 247 22505/22550, 30904139
www.semasindia.com, info@semasindia.com
Offers Area, Master & Overseas Franchisees

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்




விளையாட்டு 40-41

ஏப்ரல் 2004 மலர் : 22 இதழ் : 3

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்



நெட் பிட்ஸ்

மீன்கள் எங்கே?

எல்லோரும் படம் வரைவதற்கு 'க்ரேயான்'களைப் பயன்படுத்துகிறீர்களில்லையா? அந்த க்ரேயான்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் கரியையும், எண்ணெயையும் சேர்த்து, கறுப்பு நிறத்தில் க்ரேயான்கள் தயாரித்து, ஓவியர்களால் பயன்படுத்தப்பட்டன. எட்வின் பின்னி, ஹூரால்டு ஸ்மித் என்ற இருவரும்தான் க்ரேயான்களை உருவாக்கியவர்கள். பின்னியின் மனைவி பெயர் அலிஸ். அவர்தான் க்ரேயான்களுக்கு 'க்ரேயோலா' என்று பெயரிட்டார். ஃபிரெஞ்சு மொழியில் சுண்ணாம்பு, எண்ணெய் ஆகியவற்றுக்குரிய வார்த்தைகளிலிருந்து வந்த பெயர் இது.

ஆரம்பத்தில் கறுப்பு நிறத்தில் மட்டுமே க்ரேயான்கள் தயாரிக்கப்பட்டன என்றாலும், பின்னர் விதம்விதமான வண்ணங்கள் அதில் புகுத்தப்பட்டன. முதலில் எட்டு வித வண்ண க்ரேயான்கள்தான் கிடைக்கும். இப்போது, 120 வகையான கலர்களில் க்ரேயான்கள் தயாரிக்கப்படுகின்றன.

இன்று, உலகெங்குமுள்ள குழந்தைகளுக்காக ஆண்டுக்கு ஐம்பது கோடி க்ரேயான்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

போன தடவை, ஒரு கற்பனை வளம் மிகுந்த மணல் சிற்பத்தைப் பார்த்து ரசித்தீர்களில்லையா? இங்கே அழகான மணல் படகு. இது எப்படி இருக்கு?

• மணற்சிற்பம்



அடுத்தபடியாக, ஒரு குட்டிக்கதை.

ஜான் ஒரு நல்ல பெண்ணாகத் தேர்ந்தெடுத்து, திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான். ஜானைப் பல பெண்கள் திருமணம் செய்து கொள்ள ஆர்வமாக இருந்ததால், அவர்களிலிருந்து தகுதியான ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தான்.

தான் யார் என்பது தெரியாதபடி, ஒரு பிச்சைக்காரனைப்போல வேஷம் போட்டுக்கொண்டு சில குறிப்பிட்ட வீடுகளுக்குப் போய் பிச்சை கேட்பது என்று முடிவு செய்தான்.

ஒரு வீட்டுக்குப் போய், "அம்மா தாயே! பசி தாங்க முடியலை! கொஞ்சம் சாப்பாடு போடுங்க!" என்று கேட்க, வீட்டுக்குள்ளே இருந்து வந்த ஓர் இளம் பெண், கொஞ்சம் பிரெட்டும், முட்டையும் கொடுத்தாள்.

அடுத்து ஒரு வீட்டுக்குப் போய் பிச்சை கேட்டவுடன், சாப்பாடு போட்டதுடன் நிற்காமல், உள்ளே போய் ஒரு பழைய கம்பளியை எடுத்துக்கொண்டு வந்து கொடுத்தாள் அந்த வீட்டுப் பெண்.

மூன்றாவது வீட்டுக்குப் போய் பிச்சை கேட்டபோது வெளியில் வந்து, பிச்சைக்காரனைப் பார்த்த அந்த வீட்டுக்காரரின் இளம் பெண், "ஏனய்யா! உனக்கு இளம் வயசுதானே! கைகால்கள் எல்லாம் நன்றாகத்தானே இருக்கின்றன. உன்னால், உழைத்து



சம்பாதித்துக் கொள்ள முடியாதா? பிச்சை போட முடியாது போ!'' என்று துரத்தி விட்டாள்.

வீட்டுக்குப் போன ஜான், மறுநாள் மூன்றாவது, வீட்டுக்குப் போய், தான் அந்த வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகச் சொன்னதும், அந்தப் பெண்ணுக்கு ஆச்சர்யம்.

மாறு வேஷத்தில் வந்து, பிச்சை கேட்ட விஷயத்தைச் சொன்னவுடன் அந்தப் பெண்ணுக்கு இன்னும் ஆச்சர்யம்.

''இளைஞர்கள் பிச்சை எடுப்பது தவறு. சோம்பேறித்தனத்தின் அடையாளம். அதை ஒரு போதும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது! அதனால்தான் திட்டினேன்'' என்றாள் அந்தப் பெண்.

அவர்களுக்குத் திருமணம் நடந்து முடிந்தது. ஆக, பரிதாபப்பட வேண்டியதுதான். உதவிகள் செய்ய வேண்டும்தான். ஆனால் அது தகுதியான நபர்களாக இருக்க வேண்டும். சோம்பேறிகள், ஏமாற்றுக்காரர்கள் மீது இரக்கம் காட்டி, உதவுவது சரியில்லை என்பதுதான் இந்தக் கதை நமக்குப் புகட்டுகிற பாடம்.

ஜோக்ஸ் படித்து ரசிக்கலாமா?

ஆற்றுப் பகுதியில் ஒருவர் மீன் பிடித்துக் கொண்டிருந்தார். வெகுநேரம் தூண்டில் போட்டும், ஒரு மீனும் அவருக்குச் சிக்கவில்லை.

அப்போது அங்கே வந்த ஒரு காவல்காரர், ''இங்கே மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மீறினால் தண்டனை என்பது தெரியாதா?'' என்றார்.

ஏற்கனவே மீன் கிடைக்காத வெறுப்பிலிருந்த அந்த மனிதர், ''மீன் பிடிக்கத் தடையா? அதனால்தான் மீன்கள் வேறு இடத்துக்குப் போய் விட்டதா? என் தூண்டிலில் சிக்கவில்லையா?'' என்றாரே பார்க்கலாம்!

ஒருவன் வேலை தேடி ஒரு இன்டர்வியூக்குப் போனான். கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியாகப் பதில் சொன்னான்.

''என்ன சம்பளம் எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று முதலாளி கேட்டபோது, ''ஐயாயிரம் ரூபாய்'' என்றான்.

''உனக்கு முன் அனுபவம் கிடையாது. அப்படி இருக்கும்போது, இவ்வளவு அதிக சம்பளம் கேட்கிறாயே?'' என்று முதலாளி கேட்டார்.

அவன் சொன்னான்: ''முன் அனுபவம் இருந்தால், வேலை செய்வது சுலபம். முன் அனுபவம் இல்லாத நான் வேலை செய்ய கஷ்டப்பட வேண்டுமில்லையா? அதற்காகத்தான் அவ்வளவு சம்பளம் கேட்கிறேன்.''

அவனது சாதுர்யமான பதில், அவனுக்கு வேலை கிடைக்கச் செய்தது.

கண்களை நம்பாதே டைப்பில் இதோ ஒன்று. மேலே உள்ள சித்திரத்தை உற்றுப் பாருங்கள். என்ன தெரிகிறது? மரங்களும் செடிகளும் கொண்ட காடுதானே!

அட! என்ன... மரங்களுக்குப் பின்னால் ஒரு புலி நிற்பதையும் பார்த்து விட்டீர்களா?

சபாஷ்!

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**



மந்திர

அதிகாலையிலேயே கணேஷுக்கு விழிப்பு வந்துவிட்டது. படுக்கையில் படுத்திருக்க முடியவில்லை.

வீட்டில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

பல் விளக்கிவிட்டு, தலைவாரி வாசல் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். செருப்புகளை மாட்டிக் கொண்டு புறப்பட்டான். கால்கள் போன போக்கில் சென்றான்.

ஊர் அருகில் ஒரு காடு.

ஒத்தையடிப் பாதையில் கணேஷ் நடந்தான். கிழக்கு வானத்தில் லேசாக வெளிச்சம் புறப்படவும், பாதை தெரிந்தது.

அரை கிலோ மீட்டர் காட்டினுள் சென்றதும், அங்கே ஒரு தாமரைக் குளம்.

குளக்கரையில் சின்னஞ்சிறு பெண் தலையில் சிறு கிரீடம் ஒன்றை வைத்துக் கொண்டு நின்றாள். அந்தக் கிரீடத்தில் பதிக்கப்பட்டிருந்த ரத்தினக்கல், பச்சை ஒளியை, அந்த மங்கலான விடியல் நேரத்திலும் அவன் முகத்தில் வாரி வீசியது.

தேவதை! இறக்கைகள் இரண்டை மாட்டிக் கொண்டாள்.

கணேஷ் ஓடினான். அவள் பறந்து செல்வதற்கு முன்பாகப் பிடித்துவிட வேண்டும்.

அவன் நெருங்கியபோது, அவள் கைகளில் ரத்தினக் கற்கள் பதித்த வளையல்களை போட்டுக் கொண்டிருந்தாள். இவன் நெருங்கியதும் அவள் திடுக்கிட்டிருக்க வேண்டும். பறப்பதற்காக இறக்கைகள் ஆடத் தொடங்கின.

''போய் விடாதே, இரு'' கூவினான் கணேஷ். மூச்சு வாங்கியது அவனுக்கு.

இறக்கைகளின் ஆட்டம் நின்றது.

அவன் அருகில் நின்றான். அவளைப் பார்த்துப் புன்னகை காட்டினான். அவளும் அச்சம் விலகியவளாக, முறுவல் காட்டினாள்.

''நீ யாரு?'' கணேஷ் கேட்டான்.

''சித்திராங்கதை.''

''தேவதையா?''

தலையசைத்தாள்.



ஜாலம்

திருவாழத்தான்



"வாயேன், இப்படி உட்கார்ந்து பேசுவோம்."

"ஊஹூம். நான் போகணும்" என்று அவள் சொன்னாலும், இவனுடன் நடந்து வந்தாள்.

இருவரும் ஒரு பாறை மீது அருகருகே அமர்ந்து கொண்டனர்

"தேவதைன்னா, தேவலோகத்திலிருந்து வர்றியா?" கணேஷ் கேட்டான்.

"ஆமாம்."

"தேவலோகம் ரொம்ப அழகா?"

"அழகுதான்."

"நீ ஏன் இங்கே வந்து குளிக்கறே?"

"இங்கே நீர் சில்லென்று சுகமா இருக்கு."

"தேவலோகத்துலே குளிக்க நீர் கிடையாதா?"

"இருக்கு. ஆனால் இப்படி சில்லுனு இருக்காது. தட்ப-வெப்ப நிலை ஒரே மாதிரியாக இருக்கும் உலகம் அது. சூடாகவும் இருக்காது. குளிர்ச்சியாகவும் இருக்காது."

"நீங்க எல்லாரும் என்ன சாப்பிடுவீங்க?"

"அமிர்தம்."

"அது மட்டும்தானா?"

"ஆமாம்."

"ஏன்?"

"அதான் அங்கே கிடைக்கும். அது கூட எப்போதாவதுதான் சாப்பிடுவோம். எங்களுக்குப் பசியே கிடையாது."

"அப்படின்னா நீ இட்லி சாப்பிட்டது இல்லேன்னு சொல்."

"இல்லை. இட்லின்னா என்ன?"

"இட்லின்னா இப்படி வட்டமாக இருக்கும். நாலு அல்லது அஞ்சு அங்குல குறுக்களவு. வெள்ளை வெளேர்னு மல்லிகைப் பூ மாதிரி மென்மையாக இருக்கும். சட்னி, சாம்பார்லே இட்லியை விண்டு தோய்ச்சு சாப்பிடறது இருக்கே, அது ரொம்ப ருசி."

"சாம்பார்னா என்ன?"

"சாம்பாரும் தெரியாதா?"

"தெரியாது."

"சாம்பார்னா, அதுலே வெங்காயம் போட்டிருக்கும். கமகமன்னு வெங்காய சாம்பார் மணக்கும்."

"வெங்காயம்னா என்ன?"

"சரியாப் போச்சு போ. ஒண்ணு பண்ணு. நாளைக்கும் இங்கே நீ குளிக்க வர்றியா?" கணேஷ் கேட்டான்.

"மாட்டேன்."

"ஏன்?"

"நீதான் என்னைப் பார்த்து விட்டாயே!"

"பார்த்தால் என்ன?"

"பூலோகத்து மனுஷங்க பார்வைலே நாங்க படக்கூடாது. தேவேந்திரன் ஆணை."

"நாளைக்குக் காலைலே நீ வந்தாயானால், ஒட்டல்லேருந்து இட்லி, சட்னி, சாம்பார், மசால் தோசை, பூரி, கிழங்கு எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து உனக்குத் தரேன்."

"வேணாம். அதை எல்லாம் நான் சாப்பிட்டால், அப்புறம் பூலோகத்தை விட்டு தேவலோகத்துக்குப் போக எனக்கு மனசு வராது."

"சரி. உன் விருப்பம்" என்றான் கணேஷ்.

சித்திராங்கதை எழுந்தாள். "அப்போ நான் வரேன்" என்றாள்.

"உன் ஞாபகார்த்தமா ஏதாவது கொடுத்துவிட்டுப் போயேன்."

"ஒரு மந்திரம் சொல்லித் தரேன்."

"சரி."

"ஆனால் அந்த மந்திரத்தை ஒரே நாள் மட்டும்தான் உபயோகிக்கணும். பிறருக்கு உதவி செய்வதாக இருக்கணும். வேற யாருக்கும் தெரியக் கூடாது. உன் காதுல மட்டும் சொல்றேன்."

சொல்லிவிட்டுப் பறந்தாள் குட்டி தேவதை.

திரும்பி நடந்தான். ஒத்தையடிப் பாதை. அவனைக் கண்ட முயல் ஒன்று தாவிச் செல்ல முயன்றது. முடியவில்லை. கூர்ந்து பார்த்தபோது, அதன் இரு பின்னங் கால்களும் சேதப்பட்டிருந்தன.

இந்த முயலுக்குக் கால்கள் சரியாக



ஆஸ்திரேலியாவில் ஈமு என ஒரு வகை பறவை உள்ளது. இதனால் பறக்க இயலாது. மாறாக நீந்தும்.



வேண்டும். மந்திரத்தை முணுமுணுத்தான் கணேஷ். ஆச்சர்யம்! பம்மி இருந்த முயல் லேசாக நிமிர்ந்தது. திரும்பி கால்களைப் பார்த்துக் கொண்டது. அவ்வளவுதான் தாவிக் குதித்து ஓடி விட்டது.

கணேஷுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி.

ஒரு மரத்தின் அடியில் ஒரு மாது சோர்ந்து போய் சாய்ந்திருந்தாள். அருகில் சென்றான் கணேஷ். "என்னங்க?" என்றான்.

தன் வயிறைத் தொட்டுக் காண்பித்து "பசி" என்றாள்.

"அவ்வளவுதானா! இதோ"

அந்த அம்மாவுக்கு எதிரே இட்லி, சட்னி, சாம்பார், மசால் தோசை, பூரி, கிழங்கு!

'அது எப்படி? இட்லின்னா என்ன, சட்டினி எப்படி இருக்கும்? என்று குட்டி தேவதை கேட்டாளே, அவளது மந்திரமே அவற்றைக் கொண்டு வந்திருக்கின்றனவே! எப்படி?' கணேஷுக்குப் புரியத்தான் இல்லை.

ஆவலுடன் சாப்பிட்டாள் மாது. எத்தனை நாள் பட்டினியோ, பாவம்.

மாலையில் பள்ளியிலிருந்து கணேஷ் வீடு திரும்பியபோது, அப்பா வந்திருந்தார்.

"அப்பா, ஸ்ரீராம் தியேட்டர்லே த்ரீ டைமன்ஷன் படம் போடறாங்க. ஸ்கூல்லே எல்லாப் பசங்களும் பார்த்துட்டு வந்து, ஓகோன்னு பேசிக்கிறாங்க. என்னை இன்னிக்குக் கூட்டிக் கொண்டு போங்க" என்றான்.

"எனக்கு நேரம் இல்லை. வேணும்னா நீயே போ. வயசு பன்னிரெண்டு ஆச்சு. பயப்படாமல் தனியாகப் போக வரத் தெரிஞ்சுக்கணும்."

அப்பா கொடுத்த ரூபாயை வாங்கிக் கொண்டு சென்றான். ஒரு பாக்கெட் உருளைக் கிழங்கு சிப்ஸ், ஒரு பாக்கெட் பாப்கார்ன் வாங்கிக் கொண்டு சென்று, ஓர் ஓரமாக உட்கார்ந்தான்.

சிறுவர்கள் கூட்டம் அதிகம்.

'மந்திர ஜாலம்' படம். படத்தில் வரும் ராட்சஸன் பல வேடிக்கை வேலை களைச் செய்தான்.

ஒரு பெரிய கூடை நிறைய மிட்டாய்கள். அவற்றை அள்ளி அள்ளி பார்வையாளர்களை நோக்கி ராட்சஸன் வீசினான். பிடிக்க ஒவ்வொருவரும் கை நீட்டினர். அத்தனை அருகில் மிட்டாய்கள் வந்தன. கணேஷ் மந்திரத்தை உச்சரித்தான். ஆச்சர்யம்! ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு மிட்டாய். சுவைத்தனர். மணமும் இனிப்புமாக இருந்தது.

இரவு எட்டரை மணிக்குப் படம் முடிந்து விட்டது. அதிசயத்துடன் பேசிக் கொண்டு பார்வையாளர்கள் சென்றனர்.

விவரம் அறிந்து, அடுத்த காட்சிக்கு ரசிகர்கள் தியேட்டர் வாசலில் டிக்கெட்களுக்காக அலை மோதினர்.

வீடு திரும்பிய கணேஷ், வாசல் கதவில் பூட்டுத் தொங்குவதைப் பார்த்தான்.

மந்திரத்தை ஜபித்தான்.

கதவைத் திறந்து கொண்டு அவன் வீட்டினுள் செல்லவும், பூட்டு எழுந்து பூட்டிக் கொண்டது. கை, கால்கள் கழுவி வந்து படுத்தான். உறங்கி விட்டான்.

மற்றவர்கள் வாசல் கதவில் பூட்டுத் தொங்குவதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். எட்டரை மணிக்கே சினிமா விட்டிருக்க வேண்டுமே. கணேஷ் வீடு திரும்பி இருக்க வேண்டுமே!

பக்கத்து வீட்டில் விசாரித்தபோது கணேஷ் வந்து சாவியைக் கேட்கவில்லை என்று சொன்னார்கள். சாவியை வாங்கி வந்து, வீட்டைத் திறந்து, உள்ளே வந்து பார்த்தபோது, அவன் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, மேலும் அதிர்ச்சி அடைந்தனர். தூங்குபவனை எழுப்பி, எப்படி உள்ளே வந்தாய் என்று கேட்க அவர்களுக்கு விருப்பமில்லை.


காலையில் எழுந்தபோது, கணேஷுக்கு அந்த மந்திரம் மறந்துவிட்டிருந்தது. ●



வால்ட் டிஸ்னி பட நிறுவனத்திலிருந்து இன்னொரு அனிமேஷன் படம் வெளிவந்து, உலகெங்கும் பரபரப்பாகப் பேசப்பட்டிருக்கிறது. மேலை நாடுகளில் 2003 ஆம் ஆண்டு நவம்பரிலேயே வெளிவந்து ஏகோபித்த ஆதரவைப் பெற்ற 'பிரதர் பேர்' இந்தியாவில் மார்ச் இறுதியில் வெளியாக இருக்கிறது. ஆஸ்கர் போட்டியில் நாமினேஷன் செய்யப்பட்டிருந்தது இந்தப் படம்.

இந்தப் படத்தின் கதைதான் என்ன?

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் வடமேற்குப் பகுதியில் ஒரு பழங்குடி கிராமம். அங்கு சீகா, டெனாஹி, கீனாய் என்று மூன்று சகோதரர்கள் வசித்து வந்தனர். கீனாய்தான்





கடைக்குட்டி.

மந்திரவாதி டானனாவை அந்தக் கிராமத்தில் குருவாக மதித்து வந்தனர். மந்திரவாதி கிராமத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் பிராணிகள் உருவம் பொறித்த சின்னத்தை வழங்குவார். அந்தச் சின்னம் வாழ்நாள் முழுவதும் அவர்களைப் பாதுகாப்பதாக நம்பினர். சீகாவுக்குக் கழுகுச் சின்னமும், டெனாஹிக்கு நரிச் சின்னமும், கீனாய்க்கு கரடிச் சின்னமும் கிடைக்கிறது. கரடிச் சின்னம் என்றால் அன்பு என்று பொருள்.

ஒருநாள் கீனாய் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது அவ்வழியே ஒரு கரடி வருகிறது. கீனாய் பிடித்திருந்த மீன்களைச் சாப்பிட்டு விடுகிறது கரடி. கீனாய்க்குக் கோபம் வர, கரடி கொல்லப்படுகிறது.

அன்பை வெளிக்காட்டக் கூடிய கரடிச் சின்னத்தை வைத்திருப்பவனே கரடியைக் கொன்றுவிட்டதால், கீனாய் கரடியாக மாறுகிறான்.





கரடியாக மாறிய தம்பி!

இதற்கிடையில் தம்பியைத் தேடிக் கொண்டு சீகா காட்டுக்குள் வரும்போது இறந்து விடுகிறான். கரடிதான் சீகாவைக் கொன்றுவிட்டதாக டெனாஹி நினைக்கிறான். மந்திரவாதி சீகாவின் மரணத்துக்கு கரடி காரணம் இல்லை என்று புரிய வைக்கிறார். டெனாஹி கீனாயைத் தேடிக் காட்டுக்குக் கிளம்புகிறான்.

காட்டில் கரடியாக மாறிய கீனாய்க்கு கோடா என்ற கரடிக்குட்டியின் நட்பு கிடைக்கிறது. கீனாய் மற்றக் கரடிகளுடன் சேர்ந்து அன்பு, நட்பு, வாழ்க்கைப் பாடத்தை பல நிகழ்ச்சிகளின் மூலம் உணர்ந்து கொள்கிறது. முழுமையாக உணரும்போது கரடி மீண்டும் கீனாயாக மாறுகிறான். அப்போது டெனாஹி அங்கு வர தன் கிராமத்துக்குத் திரும்புகிறான் கீனாய். காட்டில் கீனாய் கரடியும் கோடா கரடியும் அடிக்கும் லூட்டி அனைவரையும் மகிழ்ச்சிப்




படுத்துகிறது.

கதை பத்தாயிரம் வருடங்களுக்கு முன்பு நடப்பதால் காட்டில் அழிந்து போன மம்மூத் போன்ற பிராணிகள் எல்லாம் வலம் வருகின்றன.

பரீட்சை முடிந்ததும் ஜாலியாக விடுமுறையைக் கழிக்க, பிரதர் பேர் படம் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறது.

அட்டையில்: 'பிரதர் பேர்' ஸ்டில் மற்றும் பிள்ளை படம்

நீண்ட காலம் பயன் தரும்!



எங்கள் எண்ணங்கள்...



மரம், செடி, கொடி இல்லாமல் மனிதர்கள் இல்லை. 'இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்னும் பழமொழி யானைக்கு மட்டுமல்ல, தாவரங்களுக்கும் பொருந்தும். வெறும் காட்சிப் பொருளாக மட்டுமே வைத்துக் கொள்ளக் கூடிய பரிசுப் பொருட்களைப் பிறந்த நாள் பரிசாக நண்பர்களுக்குக் கொடுப்பதை விட்டொழித்து ஆயுளுக்கும் பயன்தரும் அரிய மரக்கன்றுகளைப் பரிசாகக் கொடுத்தால் நண்பர்கள் பூரித்துப் போவார்கள். அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் குடியிருக்கிறவர்களென்றால் நல்ல தரமான நூல்களைப் பரிசாகக் கொடுக்கலாம்.

- அ.ஜெரி, ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் மேல் நிலைப் பள்ளி,
நல்லூர்

நமக்கு வேண்டியவர்களின் பிறந்த நாளின்போது மரக் கன்றுகளைத்தான் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்பதில்லை. அதற்குப் பதிலாக சில முக்கியமான மரம், செடி, கொடி வகைகளின் விதைகளைக் கூட நாம் பரிசாகக் கொடுக்கலாம். வீட்டைச் சுற்றி இடம் இல்லையென்றால் என்ன? ஃபிளாட்டில் குடியிருக்கிறவர்களுக்கும், நாம் செடி, கொடிகளைப் பரிசாகக் கொடுக்கலாம். அவர்கள் வீட்டு மாடியில் வளர்க்கலாம். இது வீட்டிற்கும், நாட்டிற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

- கோ.பாலசுப்பிரமணி,ஒன்பதாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி, நல்லூர்


வீட்டைச் சுற்றி இடம் இல்லாதவர்கள் வீட்டு ஸ்லாபில், வீட்டு மாடியில் தொட்டிகளில் செடியை வளர்க்கலாம். இதுவும் மரம்போல நிறைய பயன் தரும். இப்பொழுது நீர் இல்லாமல் மரங்கள் காய்ந்து விடுகின்றன. குளியலறை, சமையல் அறையில் வீணாகும் தண்ணீர் செல்லும் இடத்தில் ஒரு மரக்கன்றை நடலாம். மரக் கன்றுகளை நட்டு நீர் வளத்தை உயர்த்தலாம்.

- கோ. தனலக்ஷ்மி, மூன்றாம் வகுப்பு,
ஆர்.சி.எம். துவக்கப் பள்ளி,
திருவண்ணாமலை

பிறந்த நாள் பரிசாக மரக்கன்றைக் கொடுப்பது அவ்வளவு சரியல்ல என்பது என் கருத்து. ஒரு வேளை அது வளராமல் போய்விட்டால் நல்ல நாளில் பெற்ற பரிசு மனவருத்தத்தை உண்டாக்கிவிடும். மற்ற தினங்களில் அதைப் பரிசாகக் கொடுக்கலாம். நாமாகவே நம் பிறந்தநாள் அன்று ஒரு மரக்கன்றை நட்டு வைக்கலாம். நம் வயதை நினைவுபடுத்தவும் உதவும். அன்று நட்டு வைத்துவிட்டு பின் மறந்து விடாமல் சுற்றுபுறச் சூழலுக்கு உதவும் மரங்களை குழந்தை போல் பராமரிப்பது மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம்.

- சே.நம்பிகிருஷ்ணன், ஒன்பதாம் வகுப்பு,
டி.வி.எஸ். மேல்நிலைப்பள்ளி,
மதுரை.

ஹா... ஹா... ஹா...



தொட்டால் சிணுங்கி சுருங்குவது ஏன்?



அன்புள்ள ஜக்கு...

• ஜோசஃபின் மேரி, திருச்சி.

? சமீபத்தில் அறிவித்த ஆஸ்கார் விருதில் குழந்தைகள் திரைப்படம் எதற்காவது விருது கிடைத்திருக்கிறதா ஜக்கு?

ஃபைண்டிங் நீமோ, பிரதர் பேர் உட்பட சில படங்கள் ஆஸ்கர் போட்டியில் நாமினேஷன் செய்யப்பட்டன. இதில் ஏற்கெனவே வெளி வந்து குழந்தைகளைக் கொள்ளை கொண்ட ஃபைண்டிங் நீமோ படத்துக்கு ஆஸ்கர் விருது கிடைத்திருக்கிறது ஜோசஃபின்.



* தொட்டால் சிணுங்கி

• ஜெ. தனசேகரன், கொண்டையாங்குப்பம்.


? ஜக்கு, தொட்டால் சிணுங்கிச் செடியைத் தொட்டவுடன் ஏன் சுருங்குகிறது?

தொட்டால் சிணுங்கி கூட்டு இலைகளைக் கொண்ட செடி. இந்தக் கூட்டு இலைக் காம்பிற்கு அடியில் தண்டுடன் சேரும் பகுதி சற்றுப் பருத்து காணப்படும். இந்தப் பகுதி மெல்லிய சவ்வுச் செல்களால் ஆனது. இந்தச் செல்லினுள் நீர் மூலக் கூறுகள் எளிதில் சென்று வர முடியும். இந்தத் தடித்த பகுதியிலுள்ள செல்களில் நீர் நிறைந்து இருந்தால் இலைகள் விரிந்த நிலையில் இருக்கும். காற்று, பூச்சி, விலங்குகள், மனிதர்கள் இலை மேல் பட்டால் தடித்த பகுதி நீரை, தண்டுக்குள் செலுத்தி விடும். இதனால் அந்தச் செல்களால் இலைகளைத் தூக்கிப் பிடிக்க முடிவதில்லை. அதனால் இலைகள் சுருங்கி, இலைக்காம்பு இறங்கும். தண்டிலுள்ள நீர் காம்புக்கு வர 15 முதல் 30 நிமிடங்களாகும். அதன் பிறகே இலைகள் பழையபடி விரியும்.

• கே. பூங்குழலி, மொரட்டுப்பாளையம்.

? வோட்டுப் போட்ட அனுபவம் உண்டா ஜக்கு?

என்னைப் பார்த்தால் வோட்டுப் போடற வயதாகி விட்டதாகவா தெரிகிறது பூங்குழலி?



* ஃபைண்டிங் நீமோ

• ஆர். தேவராஜ், திருச்சி.


? நான் பதநீர் சாப்பிட்டதில்லை. நீ சாப்பிட்டிருக்கிறாயா ஜக்கு?


காலை நேரங்களில் பனை மர ஓலைகளில் பதநீர் ஊற்றித் தருவார்கள். மிகவும் சுவையாக இருக்கும். இப்பொழுது நகரங்களில் பாக்கெட்களில் பதநீர் கிடைக்கிறது. நீயும் சாப்பிட்டுப் பார்க்கலாம் தேவராஜ்.


அடுத்த
இதழில்...
பா.ராகவன்
எழுதும்
புதையல் தீவு
திகிலும் திருப்பங்களும் நிறைந்த
புதிய தொடர்கதை ஆரம்பம்

ஊனம்

கதை, படம்: ஆழி


காட்டில் ஒரு குட்டிச் சிங்கம், பிறக்கும் போதே ஒருகால் ஊனத்துடன் பிறந்து விட்டது. ஒரு நாள், அது தன் தாயிடம்...
அம்மா, ஊனமான இந்தக் காலுடன் எப்படி நான் பாய்வேன்? எப்படி என் இரையைத் துரத்திப் பிடிப்பேன்? எனக்கு அழுகை அழுகையாக வருகிறது...
மகனே! நொந்து கொள்ளாதே! சில சமயம், இது மாதிரி மாற்றமுடியாத குறைபாடுகள் ஏற்பட்டு விடுவது உண்டு. அதற்காக வெறுத்துப்போய் விடக் கூடாது. குறைகளுடனே, சமாளித்து வாழ வேண்டும்!
அம்மா சொல்வது சரியாகத்தான் இருக்கும். முதல் வேட்டைக்காகச் செல்கிறேன்! விடக்கூடாது!
அதே சமயம், அந்தக் காட்டில்...
என் செல்லக் குட்டி மானே, வீணே அழுது கொண்டு இருக்காதே!
பின்னே என்ன, அம்மா? ஒரு நரி என்னைத் துரத்தி, முகத்தில் பிராண்டியதில், எனக்கு ஒரு கண் பார்வை போய்விட்டது. இப்படி இருக்கும் போது, எதிரிகள் வருவதைத் தெரிந்து கொண்டு எப்படி தப்பி ஓடுவேன்? எவ்வாறு இரை தேடுவேன்?
பரவாயில்லை. ஒரு கண்ணாவது நன்றாக இருக்கிறதே என்று சந்தோஷப்படு, மகனே! பயந்து கொண்டு படுத்துக் கிடந்தால், உனக்கு வேண்டிய பசும் புற்கள் தேடியா வரும்?
மான்குட்டி புற்களை மேயப் போன அதே சமயம், குட்டிச் சிங்கமும் இரைதேடக் கிளம்பியது. அப்போது...
?
சின்னக் குட்டிமான்! சுலபமாக வேட்டையாடி விடலாம்..!


குட்டிச் சிங்கம் நொண்டியபடி துரத்தியது...
ஆனால், ஒரு கண் பார்வையை இழந்த மான்குட்டி, ஒரு பாறையில் தடுக்கி விழுந்தது! ஓடமுடியாமல் நடுங்கிய படியே திரும்பிப் பார்த்தது. சிங்கக் குட்டி பாயத் தயாராக இருந்தது...
குட்டிச் சிங்கமே! உன்னிடமிருந்து தப்பிவிடலாம் என்றுதான் முயற்சி செய்தேன். ஆனால், ஒரு கண் பார்வை இல்லாததால் தடுக்கி விழுந்துவிட்டேன். இன்று உனக்கு இரையாக வேண்டும் என்பது விதிபோல் இருக்கிறது! வா! என்னைக் கொன்று சாப்பிடு!
குட்டிச் சிங்கம் சிறிது நேரம் திகைத்தது. பிறகு...
எனக்கும் பசிதான். ஆனால், பலம் இழந்து நிற்பவனை அடித்துச் சாப்பிடுவது வீரம் அல்ல. உனக்கு ஒரு குறை இருப்பது போல் எனக்கும் ஒரு குறை இருக்கிறது. ஒரு கால் ஊனம்! நாம் நமக்கு உள்ள குறைகளுடனே வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் இருவரும் நண்பர்களாக இருப்போம்!
முடிந்தவரை நான் உனக்குப் பாதுகாப்பாக இருப்பேன்!
மிக்க நன்றி, நண்பா. நான் போய் வருகிறேன்...
உன்னைப் பற்றி என் அம்மாவிடம் சொல்வேன்!
மான்குட்டி தன் தாயிடம் கூறியபோது...
அப்படியா? உலகத்தில் இப்படியும் சிலர் இருக்கிறார்களே! ஆச்சரியம்தான்!

க்விஸ் நேரம்

'எண்ணெய் வளம் நிரந்தரம் அல்ல;
எனவே வீணாக்கக் கூடாது.'

பெட்ரோலியம் கன்சர்வேஷன் ரிசர்ச் அசோசியேஷன் வழங்கும் க்விஸ் நேரம். கேள்விகளுக்கான சரியான பதிலை நீங்கள் அளித்தால் சபாஷ் போட்டுக் கொள்ளுங்கள். பதில் தெரியவில்லை என்றால் கீழே விடையைப் பார்த்துக் கொள்ளுங்கள். கேள்விகளுக்குப் போகலாமா?

1. க்ரூட் ஆயில் எங்கிருந்து கிடைக்கிறது?

அ)பச்சைத் தாவரங்கள் ஆ) பூமியின் உள்ளே இ)சுரங்கத்திலிருந்து

1. சில நேரங்களில் இங்கிருந்தும் கூட எண்ணெய் கண்டு பிடிக்கப்படுகிறது.

அ) எரிமலையில்
ஆ) ஆழ்கடல் அடியில்
இ) ஆற்றின் அடியில்

3. பெட்ரோல் க்ரூட் ஆயிலில் இருந்து கிடைக்கிறது. க்ரூட் ஆயிலிலிருந்து கிடைக்கக் கூடிய மேலும் சில பொருட்களை ✓ செய்யவும்.

அ) சமையல் எரிவாயு ஆ) பட்டாசு
இ) பிளாஸ்டிக் ஈ) பேப்பர்
உ) மண்ணெண்ணெய், ஊ) பெயிண்ட்


4. எண்ணெய் வளத்தைப் பாதுகாக்க வேண்டும், ஏனென்றால்...

அ) எண்ணெய் ஆபத்தான பொருள்
ஆ) நம் விஞ்ஞானிகள் புதிய வழிகளில் பயன்படுத்த உள்ளனர்
இ) எண்ணெய் வளம் என்றென்றும் குறையாமல் இருக்கும் என்று சொல்ல முடியாது. எனவே வீணாக்கக் கூடாது.

5. எரிபொருள் வீணாகும் காரணங்களை ✓ செய்யவும்.

அ) காரில் கறுப்பு நிற புகை வருவது
ஆ) ட்ரக்கை மெதுவாக ஓட்டுதல்
இ) காருக்குப் பதிலாக சைக்கிளில் பயணம் செய்வது
ஈ) பாரத்தை ஏற்றிக் கொண்டிருக்கும்போது இஞ்சின் வேலை செய்வது

விடை: 1. ஆ 2. ஆ 3. அ, இ, உ, ஊ
4. இ 5. அ, ஈ



குறுக்கெழுத்துப் புதிர்

கட்டங்களை நிரப்புங்கள்

இடமிருந்து வலம்

1. மக்ரூன் இனிப்புக்குப் பெயர் பெற்ற ஊர் (6)
4. வாரணாசிக்கு இன்னொரு பெயர் (2)
6. அக்டோபர் 2ந் தேதி பிறந்தவர் (3)
9. மந்தி (4)
11. குஞ்சுக்கு இது முளைத்தால் பறந்து சென்று விடும் (3)
14. கதிரவன் தோன்றும் நேரம் (2)

வலமிருந்து இடம்

8. கபடம் (4)
16. ரேடியத்தைக் கண்டுபிடித்தவர் (6)


மேலிருந்து கீழ்


1. தொலைவு என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)
2. தட்டானுக்கு இன்னொரு பெயர் (3)
3. இரண்டடி வெண்பா (3)
5. சுவர் இருந்தால்_____ வரையலாம் (5)
10. கலைகளை _____ (2)
12. தென்னங் காய்கள் _____ யாகத் தொங்கும் (2)
13. வீட்டு வாசலில் போடப் படும் சித்திரம் (3)

கீழிருந்து மேல்

6. வனம் (2)
7. திட்டமிட்டு செய்யப்படும் சூழ்ச்சி _____ (2)
9. கிணற்றில் நீர் இறைக்க இது பயன்படும் (2)
14. எலும்புகளின் வளர்ச்சிக்கு _____ சத்து தேவை (5)
15. உரங்களில் ஒன்று (3)
16. முகில் (3)

- கே.வாசுகி மேனகா, பதினோராம் வகுப்பு, அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆண்டிபட்டி






விடை: 64 ஆம் பக்கம்



மாம்பழம்




அரண்மனை நந்தவனத்தின் மத்தியில் நிற்கும் மாமரம் காய்ப்பதும் இல்லை; பூப்பதும் இல்லை. ஆனால் வருடத்துக்கு ஒருமுறை சித்திரா பௌர்ணமியன்று அந்த மாமரத்தில் ஒரு தங்க மாம்பழம் பழுக்கும். அந்த மரத்தை ஒரு தேவதை பாதுகாக்கிறது. அந்தத் தங்க மாம்பழத்தை தேவதை தனக்கு விருப்பப்பட்டவர்களுக்கு மட்டுமே கொடுக்கப் பிரியப்படும்.

இந்நிலையில் அரண்மனைக்கு மோர் கொண்டு வரும் சிட்டம்மா மோர்க் கூடையை மாமரத்தின் நிழலில் இறக்கி வைத்துவிட்டு, சிறிது இளைப் பாறினாள். ஏறெடுத்துப் பார்த்த அவளுக்கு ஆச்சரியம். 'மாம்பழம். அதுவும் தங்க மாம்பழம். அடேங்கப்பா! இந்த மாம்பழம் நமக்குக் கிடைத்துவிட்டால் நாமும் பெரிய பணக்காரியாகி விடலாம்' என்ற நினைப்பில் மாம்பழம் இருக்கும் இடத்தில் தன் கூடையை வைத்துவிட்டு மோர் எடுத்துக் கொண்டு அரண்மனை நோக்கிச் சென்றாள்.

திரும்பி வந்ததும் கூடையைப் பார்த்த அவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. கூடையில் தங்க மாம்பழம். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, ஒரு துணியால் அதை மூடி எடுத்துக் கொண்டு ஓட்டம் ஓட்டமாகத் தன் வீடு சென்றாள்.

வீட்டிற்குள் சென்றதும் கதவைத் தாளிட்டாள். மாம்பழத்தைப் பத்திரமாகப் பானைக்குள் ஒளித்து வைத்தாள். பயம் ஒரு புறம். சந்தோஷம் ஒருபுறம். அவள் வழக்கம் போல் அன்றாட வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள்.



மறுநாள் வழக்கம் போல் மோர் கடைந்து எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றாள். எதுவும் நடவாதது போல் காட்டிக் கொண்டாள். சீக்கிரமாக வீடு வந்தாள். கதவைத் திறந்ததும் அவளுக்கு வியப்பாக


ராணி!

✿ வி.கமலக்கண்ணி ✿

இருந்தது. வீடெல்லாம் சுத்தமாகப் பெருக்கி, கோலமிட்டிருந்தது. பாத்திரங்கள் எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சமையல் செய்யப்பட்டிருந்தது. இதில் என்ன ஆச்சரியம் என்றால் சமைத்த உணவுகளில் ஓர் ஆள் உண்டுவிட்டு மீதி ஓர் ஆளுக்கான உணவு இருந்தது.

இதைக் கண்ட கிட்டம்மா பாட்டி, செய்தது யார்? என்று மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தாள். என்னதான் நினைத்தாலும் அவளுக்குப் பதில் கிட்டாத புதிராகவே இருந்தது.

தினமும் அவள் மோர் கொண்டு போவதும் தினமும் வீட்டில் இவ் வேலைகள் நடப்பதும் முறையாக நடந்து வந்தது. பாட்டி நமக்கு வேலை மிச்சம். சோர்வு குறைவு. இப்படியே தொடரட்டும் என்று கடவுளை வேண்டினாள். ஆனால் அவள் உள் மனது 'இதைச் செய்வது யார் என்று கண்டு பிடிக்க வேண்டுமே! எப்படி?' என்று கேட்டுக் கொண்டிருந்தது.



ஒரு நாள் கிட்டம்மா பாட்டி, மோர் கடைந்து எடுத்துக் கொண்டு அரண்மனைக்குச் செல்லாமல் பக்கத்து வீட்டில் மோர் கூடையை வைத்துவிட்டு, தன் வீட்டைப் பூட்டிவிட்டு, சாவி துவாரத்தின் வழியாக வீட்டைக் கவனித்தாள். அப்போதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. ஓர் அழகிய தேவதைப் போன்ற பெண் தன் வீட்டில் வேலை செய்வதையும், சாதம் சமைப்பதையும் கண்டு திகைத்துப் போனாள். மெதுவாக ஓசையின்றி கதவைத் திறந்தாள். உள்ளே சென்றாள். உணவு உண்டு கொண்டிருந்த அப் பெண்ணின் கரத்தைப் பிடித்தாள்.

"அம்மா நீ யார்? இங்கு எப்படி வந்தாய்?" என்ற கேள்விகள் கிட்டம்மா பாட்டியிடமிருந்து வந்தன.

"நான் நீ கொண்டு வந்த தங்க மாம்பழம். மாம்பழ ராணி, உன்னிடம் வந்ததால் எனக்கு விடுதலை" என்றவாறு பாட்டியைத் தழுவிக் கொண்டாள்.

"சரி, இனி என்னிடமே இரு. என் மகளாக" என்று கிட்டம்மா பாட்டி கூறக் கேட்டு, ராணியும் சிரித்துக் கொண்டே அதை ஆமோதித்தாள். அன்று முதல் இருவரும் ஒன்றாகவே சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர்.

மாம்பழ ராணியின் அழகும், அந்தஸ்தும் ஊரெங்கும் பரவியது. ஒருநாள் தண்ணீர் எடுப்பதற்காக ஊர்க் கேணிக்குச் சென்றாள் ராணி. அவ்வழியாக குதிரையில் அந்நாட்டு அரசன் இன்பநாதன் வந்தான். அவள் அழகில் மயங்கினான். அவள் யார் என்பதை அறிந்து வர வீரர்களை அனுப்பினான்.

வீரர்கள் கூறிய விபரங்களின்படி மோர்க்கார கிட்டம்மாவிடம் பேசி, அவளைத் திருமணம் செய்து கொண்டான் அரசன்.

அன்றுதான் முனிவரின் சாபமும் தீர்ந்தது. அவர்களுக்குப் பெண் குழந்தை ஒன்றும் பிறந்தது. ராஜாவும் ராணியும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

காது குத்த தடை!

நினைவில் நின்றவை...




முறுகல் தோசை

அன்று குடும்பத்தோடு ஹோட்டலுக்குச் சென்றோம். ஆளுக்கு ஒரு தோசை வேண்டும் என்று ஆர்டர் செய்த அப்பா ''நல்லா முறுகலா கொண்டு வாப்பா!'' என்றார்.

சிறிது நேரம் கழித்து நான்கு தோசைகளுடன் வந்த சர்வர் ஆளுக்கொன்றாக வைத்துவிட்டு, சாம்பார் கொண்டு வரச் சென்றுவிட்டார்.

ஹேமாவுக்கு வைத்த தோசை சற்று கருகி இருந்தது. அதைக் கண்ட அவள் சர்வர் சாம்பாருடன் வந்தவுடன் ''சார், நாங்க முறுகல் தோசைதான் கேட்டோம். ஆனால் நீங்க கருகல் தோசை கொண்டு



வந்திருக்கீங்க!'' என்றவுடன் சர்வர் உட்பட அனைவரும் சிரித்து விட்டனர்.

- எம். கலைச்செல்வி,
ராஜபாளையம்


ஒத்துழையாமை...

எங்கள் சமூக அறிவியல் ஆசிரியர் வகுப்பு தேர்வுக்குத் தயார் செய்யச் சொல்லியிருந்தார். ஆனால் அதிக 'ஹோம் ஒர்க்' காரணமாக சமூக அறிவியல் யாரும் படிக்கவில்லை. தேர்வு எழுதச் சொன்னபோது வேறொரு நாளுக்கு மாற்றி வைக்கும்படி கேட்டுக் கொண்டோம். அதற்கு ஆசிரியர் 'காந்தியடிகள் போன்று நீங்களும் ஒத்துழையாமையில் ஈடுபடுகிறீர்களா? அவரது ஒத்துழையாமை இந்தியாவிற்கு வெற்றியைத் தந்தது. உங்களது ஒத்துழையாமை உங்களுக்குத் தோல்வியைத் தரும்'' என்றார். அதைக் கேட்ட நாங்கள் அனைவரும் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டோம். இனி தேர்வுகளை மறுப்பதில்லை என்ற உறுதியும் செய்தோம்.

- விமல், ஒன்பதாம் வகுப்பு,
சுவார்ட்ஸ் மெட்ரிக் பள்ளி,
இராமநாதபுரம்


பெயர் மாற்றம்

என் வகுப்பில் மாரிமுத்து என்று ஒரு மாணவன் இருந்தான். தினமும் அவனைத் தவிர நாங்களனைவரும் அவரவர் இருக்கையில் அமர்ந்திருப்போம். அவன் மட்டும் ஒரு நாள் முதல் வரிசையில், அடுத்த நாள் கடைசி வரிசையில்,



இன்னொரு நாள் வேறொரு வரிசையில் அமர்ந்திருப்பான். ஒருநாள் எங்கள் தமிழாசிரியர் அவனிடம், ''உனக்கு மாரிமுத்துன்னு பேர் வெச்சதுக்குப் பதில் 'மாறி முத்து'னு வெச்சிருக்கலாம்'' என்று கூற அவன் உட்பட அனைவரும் சிரித்தோம்.

- பால. சூர்யா,
சென்னை





தடை

ஜானுவுக்குக் கோயிலில் மொட்டை போட்டு காது குத்தினோம். அவளுக்கு வயது இப்போது நான்கு. அவள் பிறந்த பொழுதே கோயிலில் கிடா வெட்டி, காது குத்துகிறதாக வேண்டிக் கொண்டோம். ஆனால் கோயிலில் கிடா வெட்டத் தடை விதித்து விட்டார்கள். அன்று அவளுக்குக் கோயிலில் மொட்டை போட்டோம். காது குத்தும்போது அவள் கதறி அழுது விட்டாள். பிறகு எல்லோரும் சாமி கும்பிட்டுவிட்டு, கோயில் வாசலில் அமர்ந்தோம். ''சாமியிடம் என்ன வேண்டிக்கிட்டே?'' என்றேன் ஜானுவிடம். ''ஆடு, வெட்டுறதுக்குத் தடை விதிச்சது போல, காது குத்தறதுக்கும் சீக்கிரம் தடை விதிக்கணும்னு வேண்டிக்கிட்டேன். வலி தாங்க முடியலையே'' என்று சொல்ல அனைவரும் அவளது வலியை உணர்ந்தோம்.

- அ. பேச்சியப்பன்,
ராஜபாளையம்




குடுகுடுப்பை...

எங்கள் தாத்தா ஊரில் இரவு ஒரு குடுகுடுப்பைக்காரர் வந்து கத்திக் கொண்டேயிருந்தார். அவர் பேசும் வார்த்தைகள் எங்களுக்குப் பயமூட்டுவதாக இருந்தது. என் தாத்தா தைரியசாலி. எங்களுக்கு நம்பிக்கையூட்டும் கதைகள் சொல்வார். அவருக்கு நான் பயந்தது கவலையளித்தது. ஜாமம் என்பதையும் பொருட்படுத்தாது ஒரு பெரிய கம்பை எடுத்துக் கொண்டு உடன் எங்கள் மாமாவையும் அழைத்துக் கொண்டு குடுகுடுப்பைக்காரரைத் தெருக்கோடி வரை விரட்டி விட்டு வந்தார். அதன் பிறகு ஒருநாள் கூட எங்கள் தாத்தாவின் வீட்டுப் பக்கம் ஒரு குடுகுடுப்பைக் காரர்கூட வருவதில்லை. அடிக்கடி வந்து தூக்கத்தைக் கெடுத்த குடுகுடுப்பையின் தொந்தரவு நீங்கியதால் எங்கள் தெருக்காரர்கள் அனைவரும் தாத்தாவைப் பாராட்டுகின்றனர்.

- எஸ். டேனியல் லியோ பிரபு,
மதுரை



தனபால் மிகப் பெரிய பணக்காரர். அவரது ஒரே நண்பர் டெய்லர் குமரன். சில மாதங்களுக்கு முன் குமரன் இறந்து விட்டார். ஒருநாள் -
குமரனோட பையன் கோபி இங்கே எதுக்கு வர்றான்?
மாமா, வீட்டில் ரொம்பக் கஷ்டம். கொஞ்சம் பணம் கொடுத்து உதவுங்க.
ம்...எப்படி இவனை அனுப்ப லாம்?
கோபி, உன் அப்பா ஏற்கனவே என்னிடம் நிறையப் பணம் கடன் வாங்கினான். அதுவே திரும்பி வரலை. நீ எப்படி தருவே?
© JINGLE BELL CREATIONS
இரக்கமில்லாத தனபால் பேச்சைக் கேட்டு கோபி திரும்பிச் சென்றான்.
ஒரு பொய் சொல்லி நல்ல வேளை தப்பிச்சிட்டேன்.
கோபி மிகவும் வருந்தினான்.
அப்பாவின் நெருங்கிய நண்பர் தனபால் மாமா. அவரே கஷ்டப்படறப்ப உதவ மாட்டேங்கிறாரே!


சில நாட்களில் தனபால் நோய்வாய்ப் பட்டார்.
ஐயோ, நோயால் இப்படி கஷ்டப்படறேனே!
கோபி தனபாலைப் பார்க்க வந்தான்.
கோபி, நான் இறந்து விடுவேன் என நினைக்கிறேன்.
அப்படியெல்லாம் சொல்லாதீங்க மாமா.
என் அப்பா இந்த ஊசியை மறந்து விட்டுப் போய்விட்டார். நீங்க மேலோகம் சென்றால் மறக்காமல் எடுத்துட்டுப் போய் கொடுத்துடுங்க.
எப்படி கொண்டு போறது?
உங்களோட ஏராளமான சொத்துகளை எடுத்துட்டுப் போகப் போறீங்க. அதோட இந்த ஊசியையும் எடுத்துட்டுப் போய் கொடுத்துடுங்க.
கோபியின் பேச்சு தனபாலைச் சிந்திக்க வைத்தது.
© JINGLE BELL CREATIONS
தனபால் தன் தவறை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்டார்.
கடவுளே, நான் ஏழைகளுக்கு உதவுவதற்காகவாவது என்னைப் பிழைக்க வை.
தனபால் விரைவில் குணமானார். இல்லாதவர்களுக்கு ஏராளமாக உதவி செய்தார்.

மறைந்திருக்கும் உயிரினங்களைக் கண்டுபிடியுங்கள்



விடைகள் : எறும்பு, வெட்டுக்கிளி, வண்டு, கூட்டுப் புழு, வண்ணத்துப் பூச்சி, சிலந்தி, பொன் வண்டு, கம்பளிப் புழு


இராமநாதபுரம்
ஸ்பெஷல்

இராமநாதபுரத்தின் சிறப்புகள்



வட நாட்டில் உள்ள காசிக்குப் புனித யாத்திரை செல்லும் இந்துக்கள் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள இராமேஸ்வரம் வந்து யாத்திரையை நிறைவு செய்கின்றனர். இஸ்லாமியர்களின் புண்ணியத் தலமாக 'ஏர்வாடி தர்ஹா' விளங்குகிறது. இங்குள்ள 'ஓரியூர்' தேவாலயம் கிறிஸ்தவர்களின் புனிதத் தலமாக இருக்கிறது. ஆக, மத நல்லிணக்கத்திற்கு இம்மாவட்டம் வழி காட்டுகிறது.

சரித்திரப் புகழ் வாய்ந்த மாவட்டம் இது என்பதை மறுக்க முடியாது. சுவாமி விவேகானந்தரை உலகிற்கு அறிமுகப்படுத்திய மன்னர் ஆண்ட பூமி இது. இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி மன்னரே விவேகானந்தரை அமெரிக்காவிற்கு அனுப்பி பேச வைத்தார்.

உலகப் புகழ் பெற்ற பாம்பன் ரயில் பாலமும், தற்போது அதனையும் மிஞ்சிடும் வகையில் கடலின் நடுவே தரைப் பாலமும் அமையப் பெற்ற மாவட்டம் இது.

கரும்பு வேண்டும்!

சேதுவனத்தில் ஜம்பு என்ற அம்மா யானையும் சிம்பு என்ற குட்டி யானையும் வசித்து வந்தன.

ஒரு நாள் சிம்பு கரும்புத் தோட்டத்தைப் பார்த்தது. தன் அம்மாவிடம் தான் பார்த்த கரும்பு தோட்டத்தைப் பற்றிக் கூறியது. அங்கு சென்றால் காவலர்களால் ஆபத்து உண்டு என ஜம்புவுக்குத் தெரியும். அதனால் அங்கு போக வேண்டாம் என்று சிம்புவுக்கு எச்சரித்தது. ஆனால சிம்பு அங்கே போவேன் என அடம்பிடித்தது. "ஃபிரெஷ்ஷா கரும்பு சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. நான் சாப்பிடப்போறேன்" எனச் சிம்பு வெகுவாக அடம் பிடித்தது. "விலங்குகளைப் பிடிக்கறதுக்கு குழி தோண்டி இலை, தழையெல்லாம் போட்டு மூடி வச்சிருப்பாங்க. அதனால அங்கே போக வேண்டாம் செல்லம்" என அன்பாய் கூறியது ஜம்பு.

"நான் சாப்பிட்டே ஆகணும்" எனச் சிம்பு மேலும் அடம்பிடித்தது. "சரி. ஓரமா நின்னு ரெண்டே, ரெண்டு கரும்பு மட்டும் சாப்பிட்டு விட்டு வா" என ஜம்பு தன் குட்டியிடம் கூறியது. சிம்பு கரும்புத் தோட்டத்தில் நுழைந்து ஹாயாக பாட்டுப்பாடிக் கொண்டே சாப்பிட்டது. "கரும்பு தான் எனக்குப் பிடிச்ச உணவு..." எனப் பாடிக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அவ்வாறு பாடிக் கொண்டே வரும்போது இடையில் இருந்த குழியைக் கவனிக்காமல் 'தொபீர்' என்று விழுந்தது. "அம்மா" எனச் சிம்பு பிளிறியது. அதன் சத்தத்தைக் கேட்ட ஜம்பு யானை தன் குட்டி சிம்பு யானையைத் தேடியது. சத்தம் வந்த திசையை நோக்கி வந்தது. அங்கு தன் குட்டி குழியில் பிளிறியபடி இருப்பதைக் கண்டது. குட்டியைத் தூக்க முயன்றது.

ஜம்புவினால் தூக்க முடியவில்லை. உடனே தன் நண்பர்களை அழைத்து வந்து தன் குட்டியைக் காப்பாற்றியது.



இராமநாதபுரம் ஸ்பெஷல்

இராமேஸ்வரத்திற்கும், இலங்கைக்கும் இடையில் உள்ள மன்னார் வளைகுடாவில், ஆசியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்கு வருடம் முழுவதும் மீன்கள் கிடைக்கின்றன. அரிய கடல் உயிரினங்களான கடற்பசு, கடற்குதிரை போன்ற கடற்செல்வங்கள் உள்ளன. மண்டபத்தைச் சுற்றியுள்ளத் தீவுக் கூட்டங்களில் பவளப் பாறைகள் திட்டுத் திட்டாக அதிகம் காணப்படுகின்றன.

பனை ஓலைத் தொழிலும் இங்குள்ள கிராமங்களில் சிறப்பாக நடைபெறுகிறது.

இராமநாதபுரத்தைச் சுற்றி இராமேஸ்வரம், ஏர்வாடி, ஓரியூர், தேவிப்பட்டினம், உப்பூர், திரு உத்திரகோசமங்கை, திருப்புல்லாணி, சேதுக்கரை போன்ற புண்ணிய ஸ்தலங்கள் உள்ளன.


கடலுக்கு மத்தியில் நவக்கிரகங்கள் உள்ள ஊர் தேவிப்பட்டினம். திருப்புல்லாணியில் சிறப்பு மிக்க பெருமாள் (தர்பசயனப் பெருமாள்) கோவில் உள்ளது. உப்பூரில் சிறப்புமிக்க விநாயகர் ஆலயம் உள்ளது.

இராமநாதபுரத்தில் உள்ள அரண்மனை மிகப் பழைமையும், பெருமையும் வாய்ந்தது. அரண்மனைக்குள் புகழ் வாய்ந்த இராஜ ராஜேஸ்வரி அம்மன் கோவில் உள்ளது. வருடம் ஒருமுறை 'மகர்நோன்பு' திருநாளன்று தங்க சிங்க வாகனத்தில் அம்மன் பவனி வந்து, அம்பு விடுவது வழக்கம். இம்மாவட்டத்திற்கு முகவை மாவட்டம் என்ற சிறப்பு பெயரும் உண்டு.

- ம. ஜெனனி, பத்தாம் வகுப்பு,
புனித அந்திரேயா மகளிர் மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்

உடனே சிம்பு தன் தவறை உணர்ந்தது. ''அம்மா, இனிமேல் எந்தச் சூழ்நிலையிலும் உன் பேச்சைக் கேட்பேம்மா'' என்று கூறிய குட்டியை ஜம்பு அணைத்துக் கொண்டது.


- ச. லோகேஸ்வரி, எட்டாம் வகுப்பு,
ஹோலி கிராஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி, தங்கச்சிமடம்,
இராமநாதபுரம் மாவட்டம்



இராமநாதபுரம் ஸ்பெஷல்

'திரு'ப் பெயர்கள்

இராமநாதபுரம் முதுகுளத்தூர் தாலுகாவில் உள்ளது திருக்காளுடையார் சுவாமி கோயில். இந்தச் சாமியை குலதெய்வமாக வணங்குபவர்கள் தங்கள் பிள்ளைகளின் பெயருக்கு முன்னால் 'திரு' எனும் அடைமொழியைச் சேர்த்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். திருமுருகன், திருச்செல்வி என்பது போன்ற பெயர்கள் இங்கு ஏராளம்.



* கமலஹாசன்



* விக்ரம்

120 நாட்கள் விழா

இராமநாதபுரம் சாயல்குடி அருகே உள்ளது காணிக்கூர் கிராமம். இங்குள்ளது பாதாள காளியம்மன் கோவில். வெட்ட வெளியில் இங்கு அம்மன் அருள்பாலிக்கிறார். தமிழ்நாட்டிலேயே 120 நாட்கள் (மாசி 17 முதல் வைகாசி வரை) தொடர்ந்து விழா நடத்தப்படும் ஒரே அம்மன் கோவில் இதுதான்.

- கோவி. இராஜேந்திரன், மதுரை

புனிதத் தலங்கள்

இராமேஸ்வரம் : இராமநாத சுவாமி, பர்வதவர்த்தனி அம்பாள்

திருப்புல்லாணி : ஆதி ஜெகன்னாதப் பெருமாள்

தேவிப்பட்டினம் : நவபாஷாண நவக்கிரகம்

நயினார்கோயில் : நாகநாத சுவாமி

- எம். சங்கீதா,
சௌராஷ்டிரா
மேல்நிலைப்
பள்ளி, பரமக்குடி.

ஆதிசிதம்பரம்

இராமநாதபுரத்திற்கு அருகேயுள்ள உத்தரகோச மங்கை என்னும் தலம் ஆதிசிதம்பரம் என்று அழைக்கப்படுகிறது. மூலவராக நடராசர் இருப்பது இத்தலத்தில் மட்டுமே. உலகிலேயே இத்தலத்தில் மட்டுமே நடராசர் திருவுருவம் மரகதத்தில் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.


- நெ. இராமன், சென்னை

அறிஞர்கள் பிறந்த மாவட்டம்

குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்கள் பிறந்தது எங்கள் மாவட்டத்தில் உள்ள இராமேஸ்வரத்தில் தான். இம்மாவட்டத்தில் உள்ள பரமக்குடி பல கலைஞர்களைத் தந்துள்ளது. நடிகர் சிவராமலிங்கம் பிள்ளை, நடிகை வி.எஸ். சிவபாக்கியம், கமலஹாசன், சாருஹாசன், சுஹாசினி, விக்ரம், டைரக்டர் கே.எஸ். அதியமான் போன்றவர்கள் பரமக்குடிக் காரர்களே!

- பரமக்குடி இரா.சு.பிரகாசம்,
உய்யகொண்டான், திருமலை

ஓவியக் கூடம்



இராமநாதபுரம் ஸ்பெஷல்



எஸ்.சபரிமகாசாயா, பதினோராம் வகுப்பு, ஏ.வி.எம்.எஸ். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்




கே. ராமலக்ஷ்மி, ஏழாம் வகுப்பு, ஏ.வி.எம்.எஸ். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்



சே. டார்வின், ஏழாம் வகுப்பு, பியர்ல் அறக்கட்டளை உயர்நிலைப் பள்ளி இராமநாதபுரம்

ஜி. தேவிகா, எட்டாம் வகுப்பு, ஏ.வி.எம்.எஸ். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்






மு. லாவண்யா, எட்டாம் வகுப்பு, பியர்ல் அறக்கட்டளை உயர்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்

முதல் சமஸ்தானம்!

இந்தியாவில் இணைந்த முதல் சமஸ்தானம் இராமநாதபுரம். இந்தியாவிலேயே கடலில் போடப்பட்ட ரயில் பாலம் பாம்பன் பாலம்தான். கடல் வாழ் ஆராய்ச்சி மையமும், கண்காட்சியகமும் மண்டபம் என்ற இடத்தில் அமைந்துள்ளன.

- ஆர். ஜெகதாம்பாள், விருதுநகர்



எழுச்சி அடைவாய்!

சிந்தனைக்குள்
சிறைப்படு
சிறந்தவனாவாய்!

முயற்சிகளுக்குள்
முகாமிடு
முதல்வனாவாய்!

தன்னம்பிக்கைக்குள்
தங்கிவிடு
தங்கமாவாய்!

- தி. சங்கீதா, பதினோராம் வகுப்பு, ஏ.வி.எம். மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்

புதிர்

12 மாணவர் 12 நிமிடத்தில் 12 பக்கக் கட்டுரையை எழுதினால் ஒரு மாணவன் எவ்வளவு நிமிடத்தில் ஒரு கட்டுரையை எழுதுவான்?

விடை : 12 நிமிடம்.

'அ' என்பவன் 'ஆ'வைவிட உயரமானவன். 'இ' என்பவன் 'அ'வை விட உயரமானவன். அப்படியானால் மூவரில் உயரமானவன் யார்?



விடை : இ

- செ. டார்வின், ஏழாம் வகுப்பு, பியர்ல் அறக்கட்டளை மையம், தர்மராஜபுரம், பரமக்குடி

விடுகதை

1. தலைகீழாகத் தொங்குவான், தலை சுற்றினால் நமக்குத் தென்றலாக வருவான் - அவன் யார்?

2. குட்டையிலே பிறந்து, குடிசையிலே வளர்ந்து சந்தைக்குப் போய் பந்தியிலே படுப்பான் - அவன் யார்?

3. சின்னச் சின்ன டப்பா, சிங்கார டப்பா, யாராலும் திறக்க முடியாத டப்பா - அது என்ன டப்பா?

விடை : 1.மின்விசிறி 2.பாய் 3. முட்டை

- சி.விக்னேஸ்வரி, ஏழாம் வகுப்பு, ஏ.வி.எம்.எஸ். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வெளிப்பட்டணம், இராமநாதபுரம்.

உயர்வு

மனிதனே
எண்ணங்களுக்குள்
எழுத்தாகி விடு.

வரலாறு

திருநெல்வேலி, மதுரை, மாவட்டங்களில் இருந்து 1910-ல் உருவாக்கப்பட்டது இராமநாதபுரம் மாவட்டம். 1985, மார்ச் 15ல் இம்மாவட்டத்திலிருந்து சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் பிரிக்கப்பட்டன.

- செ. ஆரோக்கிய டென்னீஸ், ஒன்பதாம் வகுப்பு, பியர்ல் அறக்கட்டளை மையம், பரமக்குடி.

இராமன் காலடிபட்ட இராமநாதபுரம் நகருக்கு வடக்கே, நயினார் கோவில் ரோட்டில், சுமார் 8 கி.மீ. தூரத்தில் அமைந்

கலாம் சலாம்!



கடமையைக் கண்ணாய் மதித்திடு,
மடமைச் செயல்களை மிதித்திடு!
கற்றோர் மற்றோர் போற்றிடவே,
பெற்றோர் பாதங்கள் துதித்திடு!

நெஞ்சினில் துணிவைப் பெருக்கிடு,
வஞ்சகக் குணத்தினை வெறுத்திடு!
தன்னலம் இன்றியே வளர்ந்திடு,
பொன்மனச் செம்மலாய் உயர்ந்திடு!

கனவுகள் நிறையவே கண்டிடு,
நனவுகள் ஆகிடக் கற்றிடு!
சொன்னவர் டாக்டர் அப்துல் கலாம்,
தென்னவர்க் குரைப்பாய் சலாம், சலாம்!

- வி. அனுஷா, இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஸ்பெஷல்


துள்ளது தொருவளூர் ஊராட்சி.

எங்கள் ஊரில் பெரிய கண்மாய் உள்ளது. தமிழ்நாட்டிலேயே இரண்டாவது பெரிய கண்மாய். கிட்டத்தட்ட 75 கிராமங்கள் பாசனம் பெறுகின்றன. 'வானம் பார்த்த பூமி, வைகை பூமி' என்பது போல மழை பெய்தால் தண்ணீர் வரும். தண்ணீர் நிரம்பி பல ஆண்டுகள் ஆகின்றன. கருவேல மரங்கள் கண்மாயை நிறைத்துள்ளன இப்போது.

- ரா. காளீஸ்வரி, ஒன்பதாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப் பள்ளி, தொருவளூர்.

ரேகை ஓவியம்

பி. பொன்னம்பலம், நான்காம் வகுப்பு,
வி.ஓ.சி. மெட்ரிக் பள்ளி,
காட்டுப்பரமக்குடி, இராமநாதபுரம்





முரளி : என்ன அதிசயமா இருக்கு. இந்தத் தெருவுல அந்த ஒரு வீடு மட்டும் கொஞ்சம் தூக்குன மாதிரி இருக்கு.

சுருளி : நான் அப்பவே சொல்லலே, அந்த வீட்டுல ரசம் வச்சா மணம் வீட்டையே தூக்கும்னு!

- கு. ரூபிணி, ஒன்பதாம் வகுப்பு,
ஆயிர வைசிய மகாஜன சபை
மெட்ரிகுலேசன் பள்ளி, இராமநாதபுரம்



துரோகி

காட்டெருமை வெறி கொண்டது போல் பின்னால் துரத்திக் கொண்டிருந்தது. ராஜுவும் பிரகாஷும் ஓடிக் கொண்டிருந்தார்கள். அந்த ஓட்டத்தில் ராஜுவின் கையிலிருந்த முதலுதவிப் பெட்டி கீழே விழுந்தது. ஆனால் அதைப் பற்றியெல்லாம் யோசிக்கும் நிலையில் அவர்கள் இல்லை. சுமார் பத்து நிமிடங்கள் ஓடியும் காட்டெருமையின் துரத்தல் நின்றதாகத் தெரியவில்லை.

அதேசமயம் ராஜுவின் வேகம் குறையத் தொடங்கியது. அவனால் வேகமாக ஓட முடியவில்லை. "பிரகாஷ், என்னால முடியலடா" என்று தீனமாகக் குரல் கொடுத்தான். பிரகாஷ் திடுக்கிட்டான்.

அந்தச் சமயத்தில் காட்டுப்பாதை இரண்டாகப் பிரிந்தது. அதில் ஒரு பாதையில் இருவரும் ஓடத் தொடங்கியிருந்தார்கள். ராஜுவின் நிலையைக் கண்டதும் பிரகாஷ் சட்டென்று "நீ உன்னால முடிஞ்ச வரை வேகமாக ஓடு. இல்லேன்னா மறைஞ்சுக்க. ஆல் த பெஸ்ட்" என்று கத்திவிட்டு சற்றே பின் வாங்கி மற்றொரு பாதை வழியாக ஓடத் தொடங்கினான்.

'அட துரோகி, என்னை இந்த நிலையில் விட்டுட்டு நீ மட்டும் ஓடி, தப்பிக்கலாம் என்று நினைக்கிறாயே? நாம் ஐந்து பேரும் பிரிக்க முடியாத நண்பர்கள்னு பள்ளிக்கூடத்தில் எல்லாரும் பேசிக்கிட்டாங்களே அதைப் பொய்யாக்கிட்டியே.' அதற்கு மேலும் ராஜுவால் யோசிக்க முடியவில்லை. பின்புறம் பார்த்தபோது அந்தக் காட்டெருமை இரு பாதைகளின் சந்திப்பில் ஒரு கணம் தயங்கி நின்றதைப் பார்த்தான். அடுத்தகணம் மரண பயத்துடன் அவன் மயக்கமடைந்தான்.

கண் விழித்துப் பார்த்தபோது சுற்றிலும் ஒரே சத்தம். காட்டெருமை தன்னை மிதித்துக் கொன்று விட்டதா? ஒருவேளை மேலுலகத்தில் இருக்கிறோமோ? அங்குதான் இவ்வளவு சத்தமா?

'இல்லை' என்றது அவன் அறிவு.

அருகிலிருந்த ஒரு டாக்டர், "இனிமேல் எந்தக் கவலையுமில்லே. நான்தான் சொன்னேனே. அதிர்ச்சியில் மயக்கமாயிட்டான். அவ்ளோதான்" என்றபடி நகர்ந்தார்.

செல்வராஜ் சார் பக்கத்தில் வந்து ராஜுவின் தலையைத் தடவினார். 'இவர்தான் என்னைக் காப்பாற்றியிருக்க வேண்டும்'. நன்றி பொங்க அவரைப் பார்த்துக் கைகூப்பியபோது "உன் நன்றியைப் பிரகாஷுக்குச் சொல்லு" என்றார். பிறகு நடந்ததை விளக்கினார்.

ராஜு மயக்கம் போட்டு விடுவான் என்ற நிலை வந்ததும் பிரகாஷ் பெரும் அதிர்ச்சி அடைந்துவிட்டான். பின்னால் காட்டெருமை வேகமாகத் துரத்தி வரும் நேரத்தில், தன்னால் ராஜுவைத் தூக்கிக் கொண்டு ஓடுவது முடியாத காரியம். ராஜுவுக்கு மரம் ஏறத் தெரியாது என்பதால் அந்தச் சாத்தியமும் அடைபட்டு விட்டது. என்ன செய்வது என்று தவித்தவனுக்குச் சட்டென ஒரு வழி புறப்பட்டது. மாற்றுப் பாதையில் ஓடத் தொடங்கினான். அதே சமயம் ராஜு மயங்கி கிடக்கும் பாதையில் காட்டெருமை சென்றுவிடாமல் இருக்க, அங்கிருந்த சில மரச் சுள்ளிகளை எடுத்து எருமையின் பார்வையில் படுமாறு அதன் திசையில் வீசி எறிந்தான்.

காட்டெருமை இதனால் மேலும் கோபமுற்று பிரகாஷைத் துரத்தியது. அவன் அங்கிருந்த உயரமான மரத்தின்மீது ஏறி உட்கார்ந்தபடி 'உதவி உதவி' என்று கத்தினான். இதைக் கேட்டு அங்கிருந்த வனவிலங்கு அதிகாரி ஒருவர் தூரத்திலிருந்தே அந்தக் காட்டெருமையின் உடல் மீது மயக்க மருந்து அடங்கிய ஒரு ஊசியைத் தூக்கி எறிய, அது அந்த எருமையின் உடலில் தைத்தது. சில நொடிகளில் காட்டெருமை மயங்கி விட பிரகாஷ் கீழே இறங்கினான். மயக்கமடைந்திருந்த ராஜுவை நோக்கி, விரைந்தார்கள். அதே

யார்?


✿ அருண் சரண்யா ✿

7

சமயம் தங்களோடு சேர்ந்து வராமல் ராஜூவும் பிரகாஷும் பின்தங்கி விட்டதை உணர்ந்து, செல்வராஜ் சாரும் அவர்களைத் தேடி வந்திருக்கிறார்.

கவலை பொங்க தன்னைச் சுற்றி நின்றிருந்த நண்பர்களைப் பார்த்ததும் ராஜூவுக்குக் கண்ணீர் பொங்கியது. அதுவும் பிரகாஷைப் பார்த்ததும் அவன் சத்தம் போட்டே அழுதுவிட்டான். அடுத்த அரைமணியில் நிலைமை சுமுகமாகி விட்டது.

கொடைக்கானலில் வேறு சில அழகு பொங்கும் இயற்கைக் காட்சி களைப் பார்த்து ரசித்தார்கள். கும் பலைவிட்டு யாரும் பிரிந்து போகா





மல் கட்டுப்பாடுடன் இருந்ததைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

மீண்டும் ரயிலேறி சென்னை வந்ததும் ரயில் நிலையத்தில் காத்திருந்த பள்ளியின் பேருந்து வண்டிகளில் அவர்கள் ஏறிக் கொண்டார்கள். அவரவர் வீட்டுக்கு அருகே பேருந்து நின்றபோது இறங்கிக் கொண்டார்கள். ஒவ்வொரு மாணவருக்கும் தன் கொடைக்கானல் அனுபவம் குறித்து சொல்வதற்கு ஒரு கதை இருந்தது. பாண்டூஸைப் பொருத்தவரை ஆயுள் முழுவதும் அந்தச் சுற்றுலாவை மறக்கவே முடியாதே.

ராஜுவுக்கு அழுகை நிற்கவே இல்லை. அம்மா மிகவும் வற்புறுத்தியதால் இரண்டு கவளம் சாப்பிட்டான். 'வழியில நிறைய நொறுக்குத் தீனி சாப்பிட்டிருப்பாங்க' என்றார் அப்பா சிரித்தபடியே.

மொட்டை மாடிக்குப் போன ராஜுவின் மனதில் பெரும் போராட்டம். சிறந்த நட்பு பாராட்டுவதில் தாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை அவன் குழுவைச் சேர்ந்த எல்லோருமே சந்தேகமில்லாமல் நிரூபித்துவிட்டார்கள். இவர்களில் யாரையுமே துரோகி என்று நினைப்பது கூடப் பாவம். அப்படியிருக்க அந்த நடைபாதைப் பெரியவர் தன்னை ஏன் குழப்பினார்?

யோசிக்க யோசிக்க அவர் மீது கடுங்கோபம் ஏற்பட்டது. அடுத்த நாள் அவரைப் பார்த்ததும் 'எங்களில் ஒருவரா துரோகி? தவிர, அந்தத் துரோகம் கொடைக்கானலில் தெரியவரும் என்பது போல சோதிடம் சொன்னீர்களே, இதெல்லாம் நியாயமா? எதற்காக என் மனதில் நஞ்சைக் கலந்தீர்கள்?'' என்று நாலு வார்த்தை சூடாகக் கேட்க வேண்டும் என்று முடிவெடுத்தான்.

அப்போது அவனது மனசாட்சி இன்னொரு கேள்வியை எழுப்பியது. 'டேய் ராஜு, உங்கள் குழுவின் மற்ற நாலு பேர் துரோகிகளாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீ?''


மனசாட்சியின் இந்தக் கேள்விக்குப் பதில் கூற முடியாமல் திகைத்துப் போனான் ராஜு. உண்மைதானே! தூய நட்பைச் சந்தேகிப்பதுகூட துரோகம்தானே? அதுவும் இயல்பான சம்பவங்களையெல்லாம் திரித்து அர்த்தப்படுத்திக் கொண்டது பெரிய குற்றம் இல்லையா? ஆம், சந்தேகமில்லாமல் தான்தான் துரோகி.

ராஜுவின் கண்களிலிருந்து சரம் சரமாக நீர் வழிந்தது. கொஞ்ச நேரம் கழித்து அவன் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தபோது, நல்ல நண்பர்களின் மேன்மையை முழுவதும் புரிந்து கொண்டவனாக, தேவையற்ற சந்தேகங்கள் இனி தன் மனதில் சலனங்களை ஏற்படுத்தாது என்ற உறுதி கொண்டவனாக அவன் மாறியிருந்தான்.

இனியென்ன, பாண்டூஸ் அணியினரின் நட்பு பள்ளிப் பருவத்துக்குப் பிறகும் தொடரத்தான் போகிறது.

(முற்றும்)

சரியா? தவறா?



விளையாட்டு

நோய் இன்றி வாழ, உடல் ஆரோக்கியம் மிகவும் அவசியம். ஆரோக்கியத்தை வலியுறுத்தும் விதத்தில் 40, 41ஆம் பக்கங்களில் சுவாரசியமான விளையாட்டு இருக்கிறது. இந்தப் பக்கத்தை எடுத்து வைத்துக் கொண்டு விளையாட ஆரம்பியுங்கள்.

இரண்டு முதல் நான்கு பேர் வரை விளையாடலாம். ஆளுக்கு ஒரு வண்ண பட்டன்களை வைத்துக் கொள்ளுங்கள். தாயம் போட்டு ஆரம்பியுங்கள்.

சரியான விடை என்றால் இரண்டு கட்டங்கள் முன்னேறவும்

தவறான விடை என்றால் இரண்டு கட்டங்கள் பின்னே செல்லவும்.

5. தினமும் ஒரு வேளை பல் தேய்த்தால் போதும். *சரியா, தவறா?*

10. காலை உணவு அவசியம் இல்லை. *சரியா, தவறா?*

13. பச்சைக் காய்கறிகள், பழங்கள் உடலுக்கு மிகவும் நல்லது. *சரியா, தவறா?*

17. சிறுவர்களுக்கு உடற்பயிற்சி, விளையாட்டு அவசியமில்லை. *சரியா, தவறா?*

19. சாப்பிடும் முன் கைகளை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். *சரியா, தவறா?*

22. இரவில் நீண்ட நேரம் டி.வி. பார்க்கக் கூடாது. *சரியா, தவறா?*

26. அடுத்தவர் ஆடைகளைப் பயன்படுத்தலாம். *சரியா, தவறா?*

29. அதிகமாக சாக்லேட் சாப்பிட்டால் பற்களைப் பாதிக்கும். *சரியா, தவறா?*

33. இயற்கை பானங்களைவிட பாட்டில் பானங்கள் சிறந்தது. *சரியா, தவறா?*

36. நோய் தாக்கினால் நாமே மாத்திரைகளை எடுத்துக் கொள்ளலாம். *சரியா, தவறா?*

விடைகள் :

5. தவறு. காலை, இரவு இரண்டு வேளை பல் தேய்ப்பது அவசியம்.

10. தவறு. இரவு உணவுக்குப் பின் நீண்ட இடைவெளி இருப்பதால் காலை உணவு அவசியம் தேவை.


13. சரி. பச்சைக் காய்கறிகள், பழங்களில் வைட்டமின்களும், நார்சத்துகளும் அடங்கியுள்ளன.

17. தவறு. உடல் ஆரோக்கியத்துக்கு விளையாட்டும், உடற்பயிற்சியும் சிறுவர்களுக்கும் தேவை.

19. சரி. கைகளைச் சுத்தம் செய்யாமல் சாப்பிட்டால் கிருமிகள் வயிற்றுக்குள் சென்று நோய்களை உண்டாக்கும்.

22. சரி. குறைந்தது 8 மணி நேரமாவது தூங்க வேண்டும். நீண்ட நேரம் டி.வி. பார்ப்பதால் கண்ணுக்கும் கெடுதல், தூக்கமும் கெடும்.

26. தவறு. அடுத்தவர் ஆடைகளைப் பயன்படுத்தும்போது நோய்த் தொற்று, அலர்ஜி ஏற்பட வாய்ப்பு உள்ளது.




29. சரி. பற்களின் ஆயுள் நீடிக்க அதிகமான இனிப்புகளைத் தவிர்ப்பது நல்லது.

33. தவறு. செயற்கையான பாட்டில் பானங்களை அதிகம் பருகினால் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும்.

36. தவறு. மருத்துவரை நாடுவதே நல்லது. நாமே மாத்திரைகளை எடுத்துக் கொண்டால் பக்க விளைவுகள் ஏற்படும்.

யார் முதலில் 39ஐ அடைகிறாரோ அவரே ஆரோக்கியமான வெற்றியாளர்.

அலைந்து திரியும் பறவை!



அன்புள்ள வந்தனா,

எப்படி இருக்கே? பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருப்பே. நீ சென்ற கடிதத்தில் ஆல்பட்ராஸ் பறவையைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புவதாக எழுதி இருந்தாய். தகவல்களைத் தேடி எழுத இத்தனை நாட்களாகிவிட்டது.

மிகப் பெரிய கடற் பறவை ஆல்பட்ராஸ். வட அட்லாண்டிக் கடலைத் தவிர மற்ற எல்லா கடல்களிலும் இவை வாழ்கின்றன. களைப்பில்லாமல் எப்போதும் அலைந்து திரிந்து கொண்டே இருப்பதால் 'அலையும் ஆல்பட்ராஸ்' என்று அழைக்கின்றனர். எப்பொழுதும் துறுதுறுவென்று எதையாவது செய்து கொண்டிருக்கும் உன் நினைவுதான் ஆல்பட்ராஸ் பற்றி படிக்கும் போது எனக்கு வந்தது. தென் கடல்களிலுள்ள அலையும் ஆல்பட்ராஸ் மிகவும் பெயர் பெற்றது.

ஆல்பட்ராஸ் மிக மிக அழகான பறவை. இதன் உடல் வெள்ளை நிறமாக இருக்கும். சிறகும், வாலும் கறுப்பு வண்ணம். மஞ்சள் நிற அலகு மிகவும் பலம் வாய்ந்தது: ஆறு அங்குலத்துக்கு மேல் நீளமுடையது. அலகின் நுனி வளைந்திருக்கும். அலகுக்கு இரண்டு பக்கமும் மூக்குத் துவாரம் இருக்கும். நீ வாத்துகளைப் பார்த்திருப்பாய். அவற்றின் கால் விரல்கள் நீந்துவதற்கு ஏற்ற வகையில் சவ்வினால் இணைக்கப்பட்டிருக்கும். அதே போல் தான் ஆல்பட்ராஸ் கால் விரல்களும் சவ்வினால் இணைக்கப்பட்டுள்ளன. கால்களால் நீரில் நன்றாக நீந்திச் செல்லும்.






ஆல்பட்ராஸ் பறவையின் சிறப்பு அம்சமே அதன் சிறகுகள்தான். இரு சிறகுகளையும் நீட்டினால் 9 முதல் 12 அடி நீளம் வரை இருக்கும். வந்தனா, கற்பனை செய்து பார். ஒரு குட்டி விமானம் பறக்கற மாதிரி தோன்றுமே!

பறப்பதில் ஆல்

பறப்பதில் ஆல்பட்ராஸ்க்கு இணை வேறு எதுவும் இல்லை. சிறகுகளை அடிக்காமலே, காற்று வீசும் திசைக்கு ஏற்ப சிறகுகளை விரித்து வைத்துக் கொண்டு நீண்ட நேரம் பறப்பது இதன் வழக்கம்.

எஸ்.சுஜாதா





பட்ராஸ்க்கு இணை வேறு எதுவும் இல்லை என்றே சொல்லலாம். சிறகுகளை அடிக்காமலே காற்று வீசும் திசைக்கு ஏற்ப சிறகுகளை விரித்து வைத்துக் கொண்டு நீண்ட நேரம் பறப்பது இதன் வழக்கம்.

டால்ஃபின்கள் கப்பல்களைப் பின் தொடர்ந்து செல்வதை நீ டி.வி. நிகழ்ச்சிகளில் பார்த்திருப்பாய். அதேபோல் ஆல்பட்ராஸும் பல நாட்களுக்குக் கப்பல்களைப் பின் தொடர்ந்து பறந்து கொண்டே செல்லும். நீண்ட தூரப் பயணத்தின் போது எங்கேயும் இறங்காது; இளைப்பாறவும் செய்யாது. அவ்வளவு ஆற்றல் இப்பறவைக்கு உள்ளது. ஆல்பட்ராஸ் எனர்ஜியின் ரகசியம் தெரிந்தால் நாமும் பின்பற்றலாம்.


ஆல்பட்ராஸ் சாப்பாட்டு விஷயத்தில் மிகவும் எளிமையானது. மீன்களையும், சிப்பிகளையும் மட்டுமே சாப்பிடும். சில சமயங்களில் கப்பலிலிருந்து எறியும் உணவுகளையும் சாப்பிடும்.

முட்டையிடும் நேரங்களில் மட்டுமே ஆல்பட்ராஸ் கரையை நாடும். நீண்ட தூரம் பறந்து சென்று தனித்தீவு அல்லது ஆள் அரவமற்ற கடற்கரையில் இறங்கும். இது கூடு கட்டி முட்டை இடுவது இல்லை. தரையில் எங்காவது முட்டையிடும். அதுவும் ஒரே ஒரு வெள்ளை நிற முட்டைதான் இடும். ஆணும், பெண்ணும் மாறி மாறி அடை காக்கும். ஐம்பதிலிருந்து அறுபது நாட்










களுக்குள் முட்டையிலிருந்து குஞ்சு வெளிவரும். குஞ்சின் உடல் கருமையான முடிகளால் மூடப்பட்டிருக்கும். குஞ்சுக்கு சிறகு முளைக்க நீண்ட நாட்களாகும். அதுவரை தாயும், தந்தையும் குஞ்சை



அன்பாக கவனித்து, இரையூட்டி பாது காக்கும். குஞ்சு ஓராண்டுக்குப் பின் தாய், தந்தை பாதுகாப்பிலிருந்து வெளியே வந்துவிடும். குஞ்சு 15 ஆண்டுகளுக்குப் பின்பே முட்டையிடக் கூடிய பக்குவத்தை அடையும்.

ஆல்பட்ராஸ் கூட்டம் கூட்டமாகப் பறந்து செல்லக் கூடியது. ஒரு கூட்டத்தில் 30 பறவைகள் வரை இருக்கும்.

14 வகை ஆல்பட்ராஸ்கள் உள்ளன. இவற்றின் ஆயுட்காலம் 80 ஆண்டுகள். இதன் அறிவியல் பெயர் Diomeda Exulans.

வந்தனா, இந்தக் கடிதத்தைப் படித்த பின் உன் கருத்துகளை எனக்கு எழுதி அனுப்பு. விடுமுறைக்கு அவசியம் இங்கே வா.

பிரியமுடன்
சந்தோஷ்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு!

பிப்ரவரி இதழில் அறிவித்த போட்டியில் நிறையப் பேர் கலந்து கொண்டனர். சரியான விடையளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை :

1. பெய்ஜிங் 2. ஷாங்காய், காங்வீ 3. சீனம், மேன்டரீன் 4. யென்
5. அரிசி, தேயிலை



பரிசு பெற்றவர்கள் :

1. பி. தினேஷ், வேலங்குடி, திருவாரூர் மாவட்டம்
2. ஆர். அன்னஜோதீஸ்வரன், பதினோராம் வகுப்பு, பெரியார் அரசு மேல்நிலைப் பள்ளி, சேரன்மாதேவி
3. தே. எம்லின் ஜெயராஜ், ஐந்தாம் வகுப்பு, எஸ்.டி.ஏ. மெட்ரிக் பள்ளி, மதுரை
4. பி. ஓவியா, ஏழாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சிக்கோட்டை
5. டி. யாழினி, திருவண்ணாமலை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

இராமநாதபுரம் ஸ்பெஷல்

உங்கள் வீட்டுப் பிள்ளை!





ரேசன் கடைக்காரர் : என்ன? எல்லாரும் உங்க கார்டுல நம்ம ஏரியா எம்.எல்.ஏ. பேரையும் சேர்த்து வைச்சிருக்கீங்க?

பெண்மணி : தேர்தல் நேரத்துல ஓட்டுக் கேட்கும்போது அவரு 'நான் உங்கள் வீட்டுப் பிள்ளை' என்று சொன்னாரே, அதனால்தான்!

- மு.இரா. சரண்யா, டி.டி. விநாயகர் மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்

ராஜா : பக்கத்து வீட்டுக்காரர் ஓசி பேப்பர் கேட்குறாருன்னு பேப்பரை நிறுத்தியது தப்பாய் போச்சு.

காஜா : ஏன்?

ராஜா : இப்ப நியூஸ் கேட்டுட்டுத் தரேன்னு டி.வி.யை ஓசி கேட்கிறார்!

- எஸ். ரம்யா, ஏ.வி.எம்.எஸ். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வெளிப்பட்டணம், இராமநாதபுரம்



''சாமி, 'அம்மா', 'அப்பா', 'சித்தி', 'அண்ணி' நல்லாயிருக்கணும்னா என்ன செய்யணும்?''

'' 'அவர்கள்' நல்லாயிருக்கணும்னா அந்த 'ஆடுகிறான் கண்ணனை'யும் 'அண்ணாமலை'யாரையும் 'பன்னீர் புஷ்பங்களால்' பூஜை செய்து 'வரம்' கேளு. 'குல விளக்கு' அணையாமல் 'குங்கும'த்தோட 'சொர்க்கம்'மா இருக்கும் 'குடும்பம்'. இது 'கதையல்ல நிஜம்'.

- கோ. யோகரோகிணி, அனிதா குமரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தண்டுபத்து



பாபு : எங்க வீட்டு மாடு புல் தின்னா அசை போடும்.

கோபு : எங்க வீட்டு மாடு சாணிதான் போடும்.

- க. வைஷ்ணவி, ஒன்பதாம் வகுப்பு, ஆயிர வைசிய மகாஜன சபை மேல்நிலைப் பள்ளி, இராமநாதபுரம்

எப்படி விளையாடுவது?
35ஆம் பக்கம் பாருங்கள்






21
23
25
26
24
22
27
28
29
30
32
31
33
தவறா?
34
36
37
35
1
ஆரம்பம்

குரங்குகளுக்கு ஒரு மருத்துவமனை!

மிக்ஸர் பிட்ஸ்



முட்டைகள் பல நிறம்

- சாண்டி என்னும் ஒரு வகைக் கோழி பச்சை நிறத்தில் முட்டையிடுகிறது.
- காட்டு வாத்துகள் கறுப்பு நிறத்தில் முட்டையிடுகின்றன.
- அருகானா இனக் கோழிகள் நீல நிறத்தில் முட்டையிடுகின்றன.
- சில வகைக் கோழிகள் பழுப்பு நிறத்தில் முட்டையிடுகின்றன.
- ஜப்பான் நாட்டு மயில்கள் சிவப்பு நிறத்தில் முட்டையிடுகின்றன.
- மற்ற பறவைகள் பொதுவாக வெள்ளை நிறத்தில் முட்டையிடுகின்றன.

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி



உயரம்

உலகின் மிகக் கடினமான மரங்களில் மிக உயரமாக வளரக் கூடியது யூகலிப்டஸ் மரமே. இது 325 அடி உயரம் வரை வளரக் கூடியது. இவற்றில் 300 இனங்கள் உள்ளன. ரெக்னன்ஸ் இன மரங்களிலிருந்தே அதிக எண்ணெய் கிடைக்கிறது. பட்டை காகிதக் கூழ் செய்ய உதவுகிறது. உலர்ந்த இலைகளைக் கொண்டு செய்யப்படும் டிங்சர் மருந்தாகப் பயன்படுகிறது.

- நெ. இராமன், சென்னை

மருத்துவமனை

உலகிலேயே குரங்குகளுக்கென்று இயங்கி வரும் ஒரே மருத்துவமனை, தாய்லாந்தில் லோபூரி நகரில் இயங்கி வரும் குரங்குகள் மருத்துவமனையாகும். மிகவும் அறிவு வாய்ந்த 'மக்காகு' இனக் குரங்குகள் இங்கு அதிகளவில் உள்ளன. அவற்றுக்



காகவே இம்மருத்துவமனை இயங்கி வருகிறது.

- எம். வினோத், சங்கரன்கோவில்

பாலைவனப் பூனை

மத்தியக் கிழக்கு ஆப்பிரிக்கா, ஆசிய நாடுகளின் பாலைவனங்களில் பாலைவனப் பூனை காணப்படுகிறது. உறுதியான பாதங்களைக் கொண்ட இந்தப் பாலைவனப் பூனைக்கு, சிறுத்தையின் குணாதிசயங்கள்




அப்படியே உண்டு. மணலிலும் மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் பாய்ந்து ஓடுகிறது. சற்றுத் தாழ்வாகப் பறந்து வரும் பறவைகளைத் தாவிப் பிடித்துச் சாப்பிடும். ஒரு புறாக் கூட்டம் தரையில் உட்கார்ந்து இருந்தால், அதில் ஒரே நேரத்தில் பல புறாக்களைப் பிடித்து இரையாக்கி விடும். புறாக் கூட்டம் உஷாராகிப் பறப்பதற்குள் பாலைவனப் பூனையின் வேட்டை முடிந்து விடுகிறது.

- சு. இலக்குமண சுவாமி, மதுரை

முதலையின் வாயில்...

71 வயதான பிளின் என்ற முதியவர் ஒரு துறைமுக மேடையிலிருந்து தண்ணீருக்குள் தவறி விழுந்துவிட்டார். அவரது துரதிர்ஷ்டம் தவறி விழுந்த இடம் ஒரு முதலையின் திறந்த வாய். 7 அடி நீளமுள்ள அந்த முதலையின் வாயிலிருந்து அவர் அதிர்ஷ்டவசமாகத் தப்பியதற்கு, அவர் டெலிவிஷனில் முதலைகளின் பழக்க வழக்கங்கள் பற்றி பல நிகழ்ச்சிகளைப் பார்த்த அனுபவம் கை கொடுத்து உதவியது. சட்டென்று தனது கட்டை விரலை முதலையின் கண்ணுக்குள் குத்தினார். அது வலி தாங்காமல் அவரை விட்டுவிட்டது. இடது கையில் சிறிது சதை தான் நஷ்டம்.

-பி.கமல்நாத், நாமகிரிப் பேட்டை







தண்ணீர் வேண்டாம்!

சில விலங்குகள் தண்ணீரைத் தனியாகக் குடிக்காமலேயே உயிர் வாழ்கின்றன. 'கங்காரு எலி' உயிர் வாழ்வதற்கு மிகவும் குறைந்த அளவு தண்ணீர் மட்டுமே தேவைப்படுகிறது. எனவே, இந்தத் தண்ணீரை உணவு செரிக்கும்போது தானாகவே உடலுக்குக் கிடைக்குமாறு அதன் உடலின் செரிமான அமைப்பு முறை அமைந்துள்ளது. எனவே, அது தனியாகத் தண்ணீர் குடிக்க வேண்டிய அவசியமில்லை.

- என்.ஜரினாபானு, திருப்பட்டினம்



வரைபடம்

உலகின் முதல் வரைபடம் கி.மு. 6ம் நூற்றாண்டில் அனாக்ஸிமாந்தர் என்னும் கிரேக்க தத்துவ அறிஞரால் உருவாக்கப்பட்டது. முதலில் பூமியின் மாதிரி வடிவத்தை கி.மு. 15ம் நூற்றாண்டில் கிரேக்க அறிஞர் கிராதஸ் என்பவர் உத்தேசமாக உருவாக்கினார். இன்றைய நவீன பூமி உருண்டை 500 ஆண்டுகளுக்கு முன்பு மார்ட்டின் பேன்ஹைம் என்ற ஜெர்மானியரால் உருவாக்கப்பட்டது.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்



தங்க



மாதவதாசர் நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், புராணங்களையும் கற்றுத் தேர்ந்தவர். திருமால்மீது அபாரப் பிரேமை. பார்த்துப் பார்த்து அபிஷேகம் செய்வார். அலங்கரித்து மகிழ்வார். விதவிதமான நைவேத்யங்கள். அர்ச்சனை முடிந்து, தீபாராதனை முடிந்ததும் அத்தனையையும் விநியோகித்து விடுவார். மாலையானால் பஜனை, கதாகாலட்சேபம், சுண்டல் விநியோகம் என்று அமர்க்களப்படும்.

யார் வந்து 'உபநயனம் பண்ணணும், கல்யாணம் செய்யணும்' என்றாலும் தயங்காமல் உதவி புரிவார். மனைவி இறந்ததும் சகல சாமான்களையும் ஏழைகளுக்குத் தானம் செய்துவிட்டு, ஜகந்நாதரைத் தரிசிக்கப் புறப்பட்டார்.

பூரி ஜெகந்நாதர் ஆலயத்தை அடைந்தவர் பசியாலும் பிரயாணத்தாலும் மெலிந்து, கறுத்து பார்வைக்கு ஏழை அனாதை போலக் கோயிலில் நடமாடிக்

வட்டில்

ஆர்.பொன்னம்மாள்

கொண்டிருந்தார். அவர் வசதியானவர்களுக்கு இடம் கொடாமல் வழியை அடைத்துக் கொண்டிருப்பது அர்ச்சகருக்கு எரிச்சலைத் தந்தது.

விதியை நொந்தபடி ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார் மாதவதாசர். மூன்று நாட்களாய் உணவும், நீரும் இன்றிக் கிடந்தார்.


"குழந்தாய்" குரல் கேட்டு விழித்தார்.

எதிரே ஒரு நிறைந்த சுமங்கலி தங்க வட்டிலில் புளியோதரையும், சர்க்கரைப் பொங்கலும், வடையும், சுண்டலும் வைத்துக் கொண்டு நின்றார்.

"சாப்பிடு" என்று முன்னால் வைத்தார்.

"தாயே, தாங்கள் யார்?" என்று கேட்டார் தாசர்.

"என் பெயர் அன்னலக்ஷ்மி. பட்டினி கிடந்து ஆத்மாவை வருத்திக் கொள்ளலாமா? பகவானைப் பாடக் கூட உடம்பில் தெம்பு வேண்டும். பல் நாக்கைக் கடித்து விடுகிறது. அதற்காக நாக்கு திருப்பிப் பல்லைக் கடிப்பதில்லை! நீ நாக்கைப்போல் மென்மையான மனம் படைத்தவன். எல்லோரும் அப்படி இருப்பதில்லையே!" என்று புன்னகைத்தார்.



மாதவர் சாப்பிட்டார். குடிக்க நீர் கொண்டு வந்து கொடுத்தார் தேவி. சாப்பிட்ட தட்டைக் கழுவப் போனவர் திரும்பி வந்து பார்த்தால் தேவியைக் காணோம்!

"பிரதி உபகாரம் கருதாத தாயுள்ளம்! தட்டை வாங்கிக் கொள்ளாமல் போய் விட்டார்களே! ஒரு வேளை நாளை வரலாம்" என்றெண்ணியபடி தட்டை, தலைக்கு வைத்துக் கொண்டு படுத்துவிட்டார்.

அது தங்க வட்டில் என்பதையும் அவர் உணரவில்லை! பள பளவென்று மின்னும் புதிய பித்தளைத் தட்டு என்று நினைத்தார்.

விடிந்தது. கோயில் கதவைத் திறந்தார் அர்ச்சகர். மடைப்பள்ளி பரிசாரகர் ஓடி வந்தார்.

"ஸ்வாமி! ராத்திரி துடைத்து வைத்திருந்த தங்கத் தட்டைக் காணவில்லையே" என்று கையைப் பிசைந்தார். இண்டு



என்றார்.

மறுநாள் அர்ச்சகர் தன் கனவை ஊராரிடம் கூறி, மாதவரை விடுவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அன்று முதல் அவருக்கு விசேஷ தரிசனம் கிடைத்தது. அனைவரும் அவரை வணங்கினர்.

ஒரு நாள் மழை கொட்டியது. குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த மாதவர் மேல் தமது பீதாம்பரத்தைப் போர்த்தி விட்டுப் போனார் பெருமாள்.

இதன் பிறகு மாதவதாசரை வணங்காமல் எவரும் போவதில்லை. இதை விரும்பாத மாதவர், மதுராபுரிக்குச் சென்று விட்டார்.

அங்கேயும் அர்ச்சகர்கள் இவரை விரட்டினர். மறுநாள் நைவேத்யம் தயாரிப்பவர் வெண்பொங்கலுக்கு அரிசியைக் களைந்து உலையில் போட, பானை ஓட்டையாகி நீரெல்லாம் ஒழுகி தீ அணைந்துவிட்டது.

வேறு பானை எடுத்து, அரிசி களைந்து மூன்று கற்கள் வைத்து தீமூட்ட விறகெடுக்கப் போனால், நாகம் படமெடுத்துச் சீறியது.

பூப்பறிக்கப் போனவரை மாடு முட்டி விட்டது. 'இதென்ன அலங்கோலம்?' என்று பக்தர்கள் வருந்த, "உங்கள் நிவேதனமும், மாலையும் எனக்குத் தேவையில்லை! என் பக்தன் மாதவன் பட்டினியாயிருக்க எனக்கு நைவேத்யம் எதற்கு? அவன் சன்னதியில் நிற்கக் கூடாதென்றால் எனக்கு நீங்கள் அலங்காரமும் பண்ண வேண்டாம்" என அசரீரி ஒலித்தது.

எல்லோரும் மாதவதாசரை அழைத்து வந்து பிழை பொறுக்குமாறு வேண்டினர்.

"மாதவா! நீ அனைத்தையும் தியாகம் செய்தாய்! உன்னைக் காப்பது என் கடமை" என்றார் பகவான்.

தரும குணம் உள்ளவர்களுக்கு கௌரவம் தேடி வருகிறது. ●

இடுக்கு விடாமல் தேடினார்கள்.

அதற்குள் ஒருவர் புல்பூண்டு முளைத்திருக்கும் சுற்றுப் பிராகாரத்தில் மாதவதாசர், தலைக்கடியிலுள்ள தட்டைப் பார்த்து தகவல் சொன்னார்.

ஓடி வந்து தட்டை வெடுக்கென்று பிடுங்கினார் அர்ச்சகர். ஆளாளுக்கும் திட்டி, அடித்தனர்.

"என்ன தைரியம் உனக்கு! தட்டைத் திருடியதோடில்லாமல் தலைக்கு வைத்துக் கொண்டு தூங்குகிறாய்!" என்றபடி அவரை இறுகக் கட்டி ஓர் அறையில் தள்ளிப் பூட்டினர்.

மாதவதாசர் தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

அர்ச்சனை செய்யும் போது தலையைச் சுற்றி விழுந்து விட்டார் அர்ச்சகர். எல்லோருக்கும் "இதென்ன விபரீதம்!" என்று குழப்பமாக இருந்தது.

அன்றிரவு அர்ச்சகரது கனவில் ஜகந்நாதர் தோன்றி "திருடியவன் தட்டை எடுத்துக் கொண்டு தலைமறைவாக ஓடுவானேயன்றி, தலைக்கு வைத்துக் கொண்டா படுத்திருப்பான்! நேற்று ஆதிசேஷன் வந்தான்! அவன் மூச்சுக்காற்றால் நீ மயங்கி விழுந்தாய்! மாதவனை விடுவிக்காவிடில் நாளை நடப்பதை எதிர்கொள்ள மனதைத் திடப்படுத்திக்கொள்"

1000/- ரூபாய் பரிசு!



இந்த மாதப் போட்டி

பங்கேற்பவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாதமும் அதிகரித்து வருவதைப் பார்க்கும்போது சந்தோஷமாக இருக்கிறது. இந்தப் போட்டியில் நீங்கள் பங்கேற்பது சுலபம். இங்கே கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தேடிக் கண்டுபிடித்து எழுத வேண்டும். பெற்றோர் கையொப்பமும், முகவரி கூப்பனையும் ஒட்டி அனுப்ப வேண்டும். உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடுங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும்.

ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.


கடைசித் தேதி 20.4.2004



எகிப்து

1. தலைநகரம் ....
2. முக்கிய இடங்கள் ....
3. மொழி ....
4. கரன்ஸி ....
5. முக்கிய நதி

....



6. இது எந்த நாட்டுக் கொடி?



ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97

ஒளி மின்னுவது




பொருட்கள் சூடாக இருக்கும்போது, மின்னுவதன் காரணம் தெரியுமா? அவை நாம் பார்க்கக் கூடிய மின் காந்த அலை களை வெளியிடுவதாலேயே மின்னுகின் றன. குளிர்ச்சியான பனிக்கட்டிகூட, ஒளியலைகளை வெளியிடுகின்றன. ஒரு பொருள் சூடாகும்போது, அதிலுள்ள அணுக்கள் வெப்பமடைந்து வெளியிடும் வெப்ப ஆற்றல் மூலம், நாம் பார்க்கக் கூடிய 'ஒளி'யான ஒளி ஆற்றலும் வெளிப் படுகிறது. ஒரு பொருள் சூடாகும்போது, அது வெளியிடும் வெப்ப ஆற்றலே அதி கம்; ஒளி ஆற்றல் மிகக் குறைவு. எந்தப் பொருள் ஒளிர்ந்தாலும், அதன் பெரும் பகுதி ஆற்றல் வெப்ப ஆற்றலாக வீணாகி விடுகிறது.

ஒளி என்பது மின் காந்த அதிர்வுகளின் பரவலே! ஒளி இயற்கையாகவும், செயற்கை யாகவும் உற்பத்தி செய்யப்படுகிறது. சூரிய னிடமிருந்து வரும் ஒளியில் மின்காந்த அலைகள் உள்ளன. இவற்றில் நம்மால் காண முடிந்த ஒளியலைகளும், நம்மால் காண முடியாத ஒளியலைகளும் கலந்தே உள்ளன. இவற்றுள் பார்க்க முடிந்த ஒளிக்கதிர்களின் அளவு குறைவே! பொதுவாக, ஒளி என்றால், நாம் பார்க்கக் கூடிய வெள்ளை நிற ஒளியையே 'ஒளி' என நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் மனிதக் கண்ணால் பார்க்க முடி யாத ஒளியலைகளே, பிரபஞ்சத்தில் அதிக மாக உள்ளன. வண்ணத்துப் பூச்சி போன்ற சில பூச்சி இனங்களால், நாம் காண முடியா 'புற ஊதாக் கதிர்'களின் ஒளியை நன்கு காண முடியும்!



• மாக்ஸ்வெல்




• ஷெர்ஸ்





• புற ஊதாக் கதிர்கள்





ஏன்?


> நாம் பார்க்கக் கூடிய வெள்ளை நிற ஒளியையே 'ஒளி' என நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால் மனிதக் கண்ணால் பார்க்க முடியாத ஒளியலைகளே, பிரபஞ்சத்தில் அதிகமாக உள்ளன.

மோகனா


ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் என்ற ஸ்காட்டிஷ் விஞ்ஞானிதான் 'மின்காந்த அலைகள்' பற்றி 1865ல் அறிந்தார். மனிதக் கண் காணக் கூடிய நிறமாலையில் ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு என 7 நிறங்கள் உள்ளன. இதில் ஊதாவின் அலை நீளம் குறைவாகவும், சிவப்பின் அலை நீளம் அதிகமாகவும். மின் காந்த அலையில், சிவப்புக்கும் அப்பால், நாம் காண முடியாத அலை நீளம் அதிக முள்ள அகச்சிவப்புக் கதிர்கள், மைக்ரோ கதிர்கள், ரேடியோ அலைகள் போன்றவை உள்ளன. இவற்றில் ரேடியோ அலைகள் ஒரு மில்லி மீட்டரிலிருந்து, பல கிலோ மீட்டர் நீளம் வரை உள்ளன. ராடார்கள், தொலைகாட்சி பெட்டிகள், மைக்ரோ அலை அடுப்புகள், வானொலி பெட்டிகள் ரேடியோ அலைகள் மூலம் இயக்கப்படுகின்றன. சூரியனைப் போன்ற விண்மீன் தொகுதிகளும்கூட, ரேடியோ அலைகள் உண்டாக்குவதை, சிறப்பு தொலைநோக்கி மூலம் அறிந்தனர்.



• சிவப்பு விளக்குகள்



• வானவில்



• எக்ஸ்ரே

1801ல் ஜே. டபிள்யூ. ரிட்டர் என்பவர், ஊதாக் கதிரின் கீழ், நாம் காண முடியாத அலை நீளம் குறைந்த புற ஊதாக்



• பனிக்கட்டியில் பிரதிபலிக்கும் ஒளி

கதிர்கள், எக்ஸ் கதிர்கள், காஸ்மிக் கதிர்கள் போன்றவை உள்ளன என்பதைக் கண்டறிந்தார். இவ்வகை கதிர்கள் நம் உடலில் பட்டால், தோல் செல்களைச் சிதைத்து, பாதிப்பு ஏற்படுத்திவிடும். எக்ஸ் கதிர்கள், நம் உடலில் எலும்பைத் தவிர, மற்ற பாகங்களை ஊடுருவிச் செல்லும். எனவே இவை எலும்பை நிழற்படம் எடுக்க உதவுகின்றன. அணுக்கதிர் வீச்சு கொண்ட 'காமா'க் கதிர்கள் உலோகங்களை ஊடுருவும் வல்லமை பெற்றவை. ஒரு நானோ மீட்டர் மட்டுமே நீளமுள்ள 'காஸ்மிக் கதிர்கள்' மிகுதியான ஆற்றல் பெற்றவை. சூரியன், விண்மீன்களிடமிருந்து வெளியிடப்படும் அனைத்து வகை ஒளிர்க் கதிர்களும், இரவிலும், பகலிலும் நம் பிரபஞ்சத்தில் உலவிக் கொண்டுதான் இருக்கின்றன.

குளிர்ந்த இரும்புத் துண்டு ஒளிருமா? ஒளிராது. அதனைச் சூடுபடுத்தும்போது, லேசான சூட்டில், இரும்பு கருப்பாகவே தெரியும்; வெப்பம் அதிகமாக அதிகமாக, முதலில் சிவப்பாகி, பின் ஆரஞ்சு வண்ணமாகி, பிறகு மஞ்சளாகி அப்புறம், அனைத்து வண்ணங்களையும் உள்ளடக்கிய வெண்மை நிறத்தில் ஒளிரும். வெப்பம் அதிகரிக்க, அலைநீளம் குறைந்து கொண்டே வந்து, ஒளிவிட்டு, ஆற்றல் அதிகரிக்கும். சூடாக இருக்கும் எந்தப் பொருளிலிருந்தும், அகச்சிவப்புக் கதிர்கள் உண்டாகின்றன. சூரிய ஒளியில், நம் உடலும் மற்ற பொருட்களும் சூடாவதன் காரணம், அதிலுள்ள அகச் சிவப்புக் கதிர்களே!

வில்லியம் ஹெர்ஸ் என்பவர் ஓர் இசை மேதை! வானவியல் நிபுணரும் கூட! நிறப் பிரிகையிலுள்ள ஒவ்வொரு ஒளியும், ஒவ்வொரு வெப்ப நிலையை வெளியிடுகின்றன என்பதைக் கண்டறிந்தார். ஊதா குறைவான வெப்பத்தையும், சிவப்பு அதிக வெப்பத்தையும் தருகிறது என நிரூபித்தார். அகச் சிவப்புக் கதிர்களைக் கண்டுபிடித்த பெருமை ஹெர்ஸ்க்குத்தான்.

அகச்சிவப்புக் கதிரின் தன்மையை வெப்பத்தால் உணர முடியுமே தவிர, இதனைப் பார்க்க முடியாது. நமக்குத் தாங்க முடியாத வலி ஏற்படும்போது, மருத்துவர்கள் அந்த இடத்தில் அகச் சிவப்புக் கதிர்களைச் செலுத்தி வலி நீக்குவார்கள். சூரியனிலிருந்து ஒளிக் கதிர்கள் பூமியை நோக்கி வரும்போது, வளி மண்டலத்திலுள்ள நீர்த் துளிகளில் பட்டு ஒளிச்சிதறல் ஏற்பட்டு, 'நிறப்பிரிகை'களாக மாறுகின்றன. இப்படி மீண்டும், மீண்டும் ஒளிச்சிதறல் வளி மண்டலத்தில் ஏற்படுவதால், நிறப்பிரிகையின் அடிப்பகுதியிலுள்ள ஊதா அதிகமாகச் சிதறடிக்கப்படுகிறது. அதனாலேயே வளிமண்டலமும், அதனைச் சுற்றியுள்ள பகுதியும் நீலமாகத் தோற்றமளிக்கிறது. வளி மண்டலத்தைத் தாண்டியுள்ள அண்ட வெளியைப் பார்த்தால், அது கறுப்பாகவே தென்படும். சூரிய ஒளியிலுள்ள புற ஊதாக்கதிர்களை, வளி மண்டலத்திலுள்ள ஓசோன் ஈர்த்துக் கொள்கிறது. சிவப்புக் கதிர்தான், சிந்தாமல் சிதறாமல் நீண்ட தூரம் பயணிக்கும் தன்மை கொண்டது. ஆபத்தை உணர்த்தவும், சிக்னல்களிலும், ரயில்வே கைகாட்டிகளிலும், வாகனத்தின் பின் பகுதிகளிலும் அவை இருக்குமிடம் தெரிந்து கொள்வதற்காகச் சிவப்பு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. சிவப்புக் கதிர்கள் எந்த வகை ஊடகத்தையும் தாண்டி வரும் என்பதால்தான் மலையுச்சிகளிலும், அறிவிப்பு பலகைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. மஞ்சள் ஒளியும் புகை, மூடு பனி போன்றவற்றை ஊடுருவிச் செல்லும்.




நெருப்புக் கோழியின் ஒரு முட்டை, சாதாரண கோழியின் 24 முட்டைகளுக்குச் சமம்! இதன் முட்டை ஓடை தண்ணீர் சேமிக்கும் பாத்திரமாக பாலைவனப் பகுதிகளில் பயன்படுத்துகின்றனர்!

கிளித் தலை இளவரசி!

❷ கதை : குறும்பலாப்பேரிப் பாண்டியன் படம் : லலிதா




ஆம் மன்னா!
சரி, உடனே முரசறைந்து யாழைக் கொண்டுவர ஏற்பாடு செய்யுங்கள்.
நாட்டுக்குள் இளவரசி விஷயம் வேகமாகப் பரவியது.
தாமரை, விஷயம் தெரியுமா? நம்ம இளவரசியின் தலை கிளித் தலையாக மாறிவிட்டதாம்.
ஐயோ, பாவம்! ஏதோ முரசு சத்தம் கேட்குதே! வா, பார்க்கலாம்.
நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி! மந்திர யாழை மீட்டு, யாழினியின் நோயைத் தீர்த்து வைத்து...
... தங்க மாங்கனி பெற்று வருகிறவன் நம் இளவரசியைத் திருமணம் செய்யலாம். இந்நாட்டு அரசனாகவும் முடிசூட்டிக் கொள்ளலாம்.




சரவணா, நல்ல வாய்ப்பு! நான் கிளம்பறேன்.
இதோ நானும் கிளம்பறேன்.
அரண்மனையில் -
நிறைய இளைஞர்களும் பக்கத்து நாட்டு அரசர்களும் மந்திர யாழைத் தேடிச் சென்றிருக்கின்றனர்.
என் அருமை மகளை இப்படி பார்க்க என்னால் முடியவில்லை.
ஒரு மாதம் கழித்து.
அமைச்சரே, யாழ் பற்றி ஏதாவது செய்தி வந்ததா?
இல்லை மன்னா, போனவர்கள் யாரும் திரும்பவில்லை. இதனால் புதிதாகச் செல்பவர்கள் பயப்படுகிறார்கள்.
பொற்செல்வி அரண்மனைத் தோட்டத்தில் கீ... கீ... என கத்தியபடி அலைந்து திரிந்தாள்.
கீ... கீ...
கீ...
நாட்கள் சென்றன. மன்னரால் கவலையில் நாட்டைத் திறம்பட நடத்த முடியவில்லை.
இளவரசியையும் நாட்டையும் எப்படியாவது காப்பாற்றணுமே! என்ன பண்ணலாம்?


பொன்னகர நாட்டிற்கு அருகே உள்ளது குயில் குன்றம். அங்கு இசைவேந்தன் என்ற பல கலை வித்தகன் வாழ்ந்து வந்தான்.
ஒரு நாள் -
இசைவேந்தா, இங்கே வாப்பா.
அப்பா, பயணமெல்லாம் எப்படி இருந்தது?
ம்... நன்றாக இருந்தது. பொன்னகர நாட்டுக்குப் பெரும் சோதனை.
என்ன சொல்றீங்க?
இசைவேந்தனின் தந்தை எல்லாவற்றையும் கூறினார்.
நம்மை நாடு கடத்திய மன்னருக்குச் சரியான தண்டனை.
அப்படி சொல்லாதே இசைவேந்தா.
உன்னால் தான் இள வரசியை மாற்ற முடியும்.

(தொடரும்)

வர்ணஜாலம்



கடிதங்கள்

வர வர கோகுலம் இதழ்களில் வண்ணப் பக்கங்கள் ஜாலம் காட்டுகின்றன. அதுவும் பெங்குவின் படம் அருமை. 'என் ஆசிரியர்' என்ற தலைப்பில் எங்களுக்கு எழுத வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி.

- அ. கவிதா, ஏர்வாடி

விஷம வெங்காயம்!

நெட்சிப்ஸ் பகுதி பார்க்கவும், படிக்கவும் மிகவும் சுவாரசியமாக இருந்தது. வெங்காயத்தின் விஷமத்தை படத்தில் நன்றாக வெளிப்படுத்தியிருந்தார் ஓவியர். காத்திருந்த குப்புசாமி முட்டாள்களுக்குச் சரியான உதாரணம்.


- ஆர். பாபு, பாப்பிரெட்டிபட்டி



தன்னம்பிக்கை...

ஜனா பற்றி படித்து முடித்த போது கண்களில் கண்ணீர் வழிந்தது. இவ்வளவு சிறிய பையனுக்குள் இவ்வளவு தன்னம்பிக்கையைக் கண்டு வியந்து போனேன்.





-எம்.கோகிலவாணி, பத்தமடை, திருநெல்வேலி மாவட்டம்

ஜனா...

இவ்வளவு பெரிய கஷ்டத்தை அனுபவித்து வரும் ஜனா மிகுந்த தன்னம்பிக்கையோடு வாழ்க்கையை எதிர்கொள்வது பாராட்டுக்குரியது. ஜனா நிச்சயம் பெரிய ஆளாக வருவான் என்பதில் சந்தேகமில்லை.

- வி. மூர்த்தி, சென்னை

கலக்கல்!

சாப்பிட வாங்க நரியாரே கதை சூப்பர். ஸ்டெதஸ்கோப் கண்டுபிடிக்கப்பட்ட விதத்தைப் படக்கதை மூலம் படித்தது நன்றாக இருந்தது. தஞ்சாவூர் ஸ்பெஷல் உண்மையிலேயே கலக்கிவிட்டார்கள்.


- எஸ். ஃபாத்திமா, எட்டாம் வகுப்பு, அ.உ.பெ.மே.நி. பள்ளி, நாகூர்

எப்படி?


கீரிக்கும் பாம்புக்கும் ஆகாது என்பது தெரியும். ஆனால் பாம்பை எப்படி கீரி கொல்லும் என்பது புரியாத புதிராக இருந்து வந்தது எனக்கு. மார்ச் இதழில் தெளிவாகத் தெரிந்து கொண்டேன்.

- கே. ராஜாசுப்பிரமணி, பத்தாம் வகுப்பு, அ.உ.மே.நி. பள்ளி, சிவகங்கை

சுழல் கோப்பை



கோகுலம் சுழல் கோப்பையைக் கைப்பற்ற பல பள்ளிகள் தயாராகி வருகின்றன. இப்பொழுதே நீங்களும் உங்கள் படைப்புகளை எழுதி அனுப்ப ஆரம்பித்துவிடுங்கள். அப்போது தான் போட்டியில் வெல்வது சுலபமாக இருக்கும். நீங்கள் மட்டுமின்றி, உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!



கவிதை

ஊர்வலம் வரும் தேர்



நான்கு சக்கரத் தேராம்
நாடு போற்றும் தேராம்
ஆண்டுக் கொரு தடவை
அழகு ஊர்வலம் வருமாம்.

பெரியோர் சிறியோர் இழுத்திடும்
பேரு பெற்ற தேராம்
வரிசை யாக மனிதர்கள்
வணங்கி மகிழும் தேராம்.

வண்ண வண்ண விளக்குகள்
வகை வகையாய் பளிச்சிடும்
மண்ணைக் காக்கும் அம்மனும்
மகிழ்ந்து தேரில் வந்திடும்.

ஊரார் தேரை இழுத்திட
உயரே வாணம் முழங்கிட
சீராய் மேளம் ஒலித்திட
சிறப்பாய் வரும் தேரதாம்.

வேட்டை நல்லூர் சொ.தமிழன்பன்





விளக்கின் கடமை வெளிச்சம் தருவதே!


பிரபலங்களின் வாழ்வில்...

வெற்றி!

ஜப்பான் நாட்டுப் படைத் தளபதி 'நொபு நோகா' பல போர்களைக் கண்டவர். திறமையான புத்திசாலி. ஒருதடவை எதிரி நாட்டின் மேல் படையெடுத்துப் போன போது, எதிரியின் பலத்தையும், ஆயுதக் குவியலையும் கண்ட படை வீரர்கள், 'எதிரிகளை வெல்ல முடியுமா?' என்று ஐயம் கொண்டனர்.

உடனே நொபு நோகா, "அருகிலுள்ள புத்தர் கோவிலுக்குப் போய் பூவா, தலையா போட்டுப் பார்ப்போம். தலை விழுந்தால் நாம்தான் வெற்றி பெறுவோம். பூ விழுந்தால் போரே வேண்டாம். திரும்பிப் போய் விடலாம்" என்றார். படை வீரர்களும் ஆமோதித்தனர்.

கோவிலுக்குப் போய் நொபுநோகா காசைச் சுண்ட, தலை விழுந்தது. படை வீரர்கள் மகிழ்ச்சியுடன் 'வெற்றி பெறுவோம்' என்ற நம்பிக்கையுடன் போரிட்டு, வெற்றிக் களிப்போடு நாடு திரும்பினர். வெற்றி விழாவில் நொபுநோகா, "வெற்றியை நிர்ணயித்தது அந்தக் காசுதான்" என்றபடியே நாணயத்தை எடுத்துக் காட்ட, அதன் இரு பக்கமும் தலை இருந்தது.



• பெர்னாட் ஷா

உடனே அவர், "வெற்றியை நிர்ணயிப்பது விதியல்ல. நம் நம்பிக்கையும், மன உறுதியும்தான். அதுதான் உங்களைச் செயல்பட வைத்தது. அதனால்தான் நாம் வென்றோம்" என்றார்.

- எம். வினோத்,
சங்கரன்கோவில்

மகிழ்ச்சி...

இந்திய வைஸ்ராயாக இருந்த இர்வின் பிரபு தம் பதவிக் காலம் முடிந்ததும் இங்கிலாந்திற்குப் பயணமாக ஆயத்தமானார். அவரை வழியனுப்பி வைக்க டில்லி புகை வண்டி நிலையத்தில் ஏராளமான அதிகாரிகளும் நண்பர்களும் திரண்டு நின்றார்கள். எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு வைஸ்ராய் வண்டிக்குள் ஏறப் போனார். ஸ்டேஷன் மாஸ்டர் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தார். வைஸ்ராய்க்கு வணக்கம் செலுத்திவிட்டு அவருடன் கை குலுக்கினார். பிறகு "உங்களை வழியனுப்பி வைப்பதில் எப்பொழுதுமே நான் மகிழ்ச்சி அடைபவன்" என்றாரே பார்க்கலாம்! இதைக் கேட்டு வைஸ்ராய் கூட சிரித்து விட்டார்.

• ஃபிரடெரிக்



தவறு...

ஜெர்மன் அரசர் மகா ஃபிரடெரிக் ஒருமுறை கோச் வண்டியில் சென்று கொண்டிருக்கையில் வண்டி கவிழ்ந்து கீழே விழுந்து விட்டார். அவருக்கு அடி எதுவும் படவில்லை. என்றாலும், கீழே விழுந்ததால் ஏகக் கோபம் வந்துவிட்டது. உடனே சவுக்கால் வண்டியோட்டியை அடிக்க ஓங்கினார்.

உடனே வண்டியோட்டி, "பிரபு! தவறு என்னுடையதுதான். இருந்தாலும் எவ்வளவு பெரிய வீரராகிய தாங்களும் பல போர்களில் தோற்கவில்லையா? இருபது வருட காலத்தில் நான் இந்த ஒரு தடவை தானே தவறு செய்துவிட்டேன்!" என்றான். ஃபிரடெரிக் சினம் தணிந்து அமைதியானார்.

- அ. பேச்சியப்பன், ராஜபாளையம்.

மேலே வாருங்கள்!

சுரங்கத் தொழிலாளர் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் பெர்னார்ட் ஷாவும் கலந்து கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். கூட்டத்திற்கு வருவதாக ஒப்புக் கொண்டு விட்டார். கூட்டம் நடந்து கொண்டிருந்தது. ஏதாவது பேசுமாறு ஷாவை வேண்டிக் கொண்டனர், கூட்டத்திற்கு ஏற்பாடு பண்ணியவர்கள். ஷா எழுந்தார். மக்களின் கவனமும் பார்வையும் அவர் பக்கமே திரும்பின. ஷா சொன்னார் :

"சுரங்கத் தொழிலாளர்களுக்கு நான் அதிகம் சொல்ல விரும்பவில்லை. ஒன்றே ஒன்றுதான் கூறப் பேசுகிறேன். அதை மட்டும் அவர்கள் நினைவில் கொண்டு நடந்தால் போதும். அவர்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் மீண்டும் மீண்டும் கீழே போகாதீர்கள். மேலே ஏறி வாருங்கள் என்பதுதான்!"

- கலைச்செல்வி, கோவை

எண்ணெயும் திரியும்

ஹிந்தி மொழியில் புகழ் பெற்ற எழுத்தாளர் பிரேம்சந்த். அவருக்கு உடல் நலம் சரியில்லாத சமயத்தில், கூட அவர் தனது எழுத்துப் பணியை விடாமல் செய்து வந்தார். இது அவருடைய மனைவிக்குப் பிடிக்கவில்லை. "உங்களுக்குத்தான் உடல் நலம் சரியில்லையே. ஏன், இந்த நிலையில்கூட எழுதிக் கொண்டே இருக்கிறீர்கள்? உடல் நலத்தைக் கவனிக்கக் கூடாதா? சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்?" என்று கோபமாகக் கத்தினார் அவர் மனைவி.

இதைக் கேட்ட பிரேம்சந்த் "ஒரு விளக்கை ஏற்றி வைத்தால் அதனுடைய கடமை அந்த இடத்திற்கு வெளிச்சம் தருவதுதான். அந்த வெளிச்சம் பிறருக்கு நன்மையைத் தருகிறதா, தீமையைத் தருகிறதா? என்பதைப்பற்றி அந்த விளக்கிற்குச் சிறிதும் கவலை இல்லை. எண்ணெயும் திரியும் எவ்வளவு காலம் இருக்கிறதோ, அவ்வளவு காலமும் அது ஒளி வீசிக் கொண்டுதான் இருக்கும். எண்ணெய் தீர்ந்தவுடன் அந்த விளக்கு தானாகவே அணைந்து விடும். அது போலத்தான் என் வாழ்வும்" என்றார்.

- இல. கலைவாணி,
அம்பலவாணன்பேட்டை



மயில்களில் ஆண் மயில் அழகு மயிலாக விளங்கும். தமிழ்நாட்டில் விராலிமலையை மயில்களின் சரணாலயம் என அழைக்கின்றனர்.

குயில்களில் ஆண் குயில் மட்டுமே பாடும். குக்கூ... குக்கூ... என அது இனிய குரலில் கூவுவது அருமை. பெண் குயில்கள், 'கிக்... கிக்...' என கிரீச்சிடும்.

விடுகதைப் பக்கம்

கிளைகளே இல்லாத மரம்!



I. 1. பெட்டியை உடைத்தால் பவள முத்துகள் - அது என்ன?

2. ஆயிரம் பேர் அணி திரண்டாலும், சிறிதளவுகூட தூசி கிளம்பாது - அவர்கள் யார்?

3. இரவு பகல் விழித்திருப்பான், எப்போதும் பாடிக் கொண்டிருப்பான் - அவன் யார்?

4. சடசடக்கும் குரலில் நம்மைக் கிடுகிடுக்க வைப்பான் - யார் அவன்?

- ம. இதயகுமார்,
ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, நல்லூர்.

II. 1. வானில் வட்டமிடுபவனுக்குப் பூமியில்தான் இரை - அது என்ன?

2. இறக்கை மடக்காமல் இமாலயப் பயணம் - அது என்ன?

3. உற்சாகம் வந்தால் ஆடுவான்; உயரவும் பறப்பான், பாம்புக்கு எதிரி - அவன் யார்?

4. ஒற்றைக்கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன?

- ஆனந்தி, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சிக்கோட்டை

III. 1. கிளைகளே இல்லாத மரம் - அது என்ன?

2. பட்ட மரம் இரண்டு, பால் மரம் நான்கு, வீசும் கயிறு ஒன்று - அவை என்ன?

3. காராம்பட்டினம் கறுப்பு, சேராபட்டினம் சிவப்பு, உடைச்சுப் பார்த்தால் பருப்பு, தின்று பார்த்தால் கசப்பு - அது என்ன?

- ஆர். சண்முகவேல், எட்டாம் வகுப்பு, புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளி, முத்துப்பேட்டை, இராமநாதபுரம் மாவட்டம்

IV. 1. அடித்து நொறுக்கி அனலில் போட்டால் அற்புதமாய் மணக்கும் - அது என்ன?

2. ஒரு பாத்திரத்திற்குள் இரண்டு பழரசம் - அது என்ன?

3. மரம் மேல் கிளை, கிளை மேல் மரம் - அது என்ன?

4. பார்த்தால் பல், பல் பட்டால் தண்ணீர் - அது என்ன?

- பா. கவிதா, நியூடெல்லி.

V. 1. உடம்போ வானத்திலே, உள்ளமோ தரையிலே - அது என்ன?


2. வாழ வைக்கும் வண்ண ஆடை; வாசனை மலரோ எண்ண மேடை - அது என்ன?

3. சுதந்திரமாகத் திரிவான், தந்திரமாக உண்பான், அடிபட்டு பிடிபட்டு அமரகதி அடைவான் - அவன் யார்?

-ஆர்ஜி. விநாயகா, மணலிவிளை, திசையன்விளை.

விடைகள் :

I. 1.மாதுளம், 2.எறும்புக் கூட்டம், 3.கடல் அலைகள், 4.இடி **II.** 1.கழுகு, 2.விமானம், 3.மயில், 4.வெண்டைக்காய் **III.** 1.போஸ்ட் மரம், 2.பசு கொம்பு, பால்மடி, வால், 3.குன்றுமுத்து **IV.** 1.சாம்பிராணி, 2.முட்டை, 3.அன்னாசிப்பழம், 4.ஐஸ்கட்டி **V.** 1.கழுகு, 2.வண்ணத்துப்பூச்சி, 3.கொசு



கிரிக்கெ

விஜய்க்குக் காலையில் சீக்கிரமாகவே விழிப்பு வந்துவிட்டது. இரவும் நீண்ட நேரம் கழித்துதான் உறங்கினான். காரணம் நேற்று நடந்த சம்பவம்.

விஜய்க்கு கிரிக்கெட் என்றால் மிகவும் பிடிக்கும். இந்தியா வேறு நாட்டுடன் விளையாடுகிறபோதெல்லாம் ஆர்வமுடன் பார்ப்பான். விடுமுறை நாளாக இருந்தால் தொலைக்காட்சி முன்பு அமருகிறவன் எழவே மாட்டான். நேற்றும் அப்படித்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவன் அப்பா அலுவலகத்திலிருந்து வந்தார்.

''விஜய் என்ன இது? எக்ஸாம் நெருங்கிக்கிட்டு இருக்கு.படிக்காம டீ.வி. பார்த்துட்டு இருக்கியே?'' என்று கோபமாகக் கேட்டார்.

''இன்னும் கொஞ்ச நேரம்தாம்ப்பா, மேட்ச் முடிஞ்சுடும். அப்புறம் படிக்கிறேன்'' என்றான்.

''என்னடா பேசறே, படிப்பைவிட மேட்ச்சா முக்கியம்? நாளைக்கு அவங்களா வந்து எல்லாம் எழுதுவாங்க? அவங்க வேலை விளையாடறது. அதை அவங்க செய்யறாங்க. உன் வேலை படிக்கறது. முதல்ல அதைச் செய்'' என்றார் அப்பா.

விஜய் முகம் வாடிப் போனது. எழுந்து போய் விட்டான்.

பிறகு இரவுச் சாப்பாட்டின்போதுதான் அறையை விட்டு வந்தான். அப்போதும் யாரிடமும் பேசாமல் சாப்பிட்டான்.

''என்ன விஜய் கோபமா?'' என்று கேட்டார் அப்பா.

''பின்னே என்னப்பா, நான் என்ன படிப்புல மக்காவா இருக்கேன்? நல்லாதானே படிக்கிறேன். மற்ற சமயங்களில் டீ.வி. பார்க்கிறேனா? கிரிக்கெட் போடும்போது மட்டும்தான் பார்க்கறேன்.''

''நீ சொல்றது கரெக்ட்தான் விஜய். மற்ற சமயங்களில் உன்னைப் பார்க்காதேன்னு தடுத்து இருக்கேனா? நீயே சொல்லு. இப்ப ஆன்வெல் எக்ஸாம் வருது. நீ நல்லா படிக்கிறவன்தான். ஆனாலும் இப்ப கவனம் முழுக்க அதுலதான் இருக்கணும். சின்ன அலட்சியம்கூட பெரிய தவறை ஏற்படுத்தும். ஒரு மார்க்குலகூட ஒரு வருஷம் வீணாகும். அதுக்குத்தான் சொல்றேன்'' என்று கூறினார்.

''விஜய், அப்பா உன் நல்லதுக்குத்தான் சொல்வார். புரியுதா?'' என்றார் அம்மா.

விஜய் தலையாட்டினான். ஆனாலும் அவனது கிரிக்கெட் ஆசையை அடக்க முடியவில்லை. 'இன்றோ விடுமுறை நாள். அப்பா, அம்மாவும் வீட்டில்தான் இருப்பார்கள். அதனால் கிரிக்கெட் பார்க்க முடியாது



அடிமை!

வாண்டுதாசன்

என்ன செய்யலாம்?' என்று இரவு முழுவதும் யோசித்தான். அதனால்தான் சரியாகத் தூக்கமில்லை. இப்போதும் சீக்கிரம் எழுந்து விட்டான். படுக்கையில் படுத்தவாறே இருந்தவனுக்குத் திடீர் என அந்த யோசனை தோன்றியது.

விஜய்யின் நண்பன் பிரகாஷ். அவனுக்கும் கிரிக்கெட் என்றால் பிடிக்கும். முந்தைய நாள் நடந்த விளையாட்டைப் பற்றி அடுத்த நாள் இருவரும் விவாதிப்பார்கள். பிரகாஷின் அப்பா ஹோட்டல் வைத்திருக்கிறார். அதனால் ஞாயிற்றுக் கிழமைகளில் அவர் வீட்டில் இருக்க மாட்டார். அவனது அம்மாவும் ஊருக்குச் சென்றிருப்பதாக நேற்று கூறினான்.

'ஆக பிரகாஷ் மட்டும்தான் வீட்டில் இருப்பான். அங்கே சென்றால் மேட்ச் பார்க்கலாம்' என்று முடிவு செய்தான் விஜய்.

பின்னர் உற்சாகத்துடன் எழுந்து கொண்டான். சுறுசுறுப்புடன் குளித்து தயாரானான். காலைச் சிற்றுண்டியைச் சாப்பிட்டு விட்டு புத்தகத்தை எடுத்துக் கொண்டான்.

"அப்பா, நான் என்னோட ஃபிரண்ட் பிரகாஷ் வீட்டுல போய் படிக்கிறேன்" என்றான்.

"சரி, போய்ட்டு வா" என்றார் அப்பா.

விஜய் சந்தோஷத்துடனும் ஆவலுடனும் கிளம்பி பிரகாஷ் வீட்டை அடைந்தான்.

"வா விஜய்" என்று வரவேற்றான் பிரகாஷ்.

"வீட்டுல யாருமில்லையா பிரகாஷ்?" என்று கேட்டான் விஜய்.

"இல்லை, ஏன்?"


அப்படின்னா மேட்ச் பார்க்கலாம்."

"மேட்ச்சா, இப்பவா? வேணாம் விஜய்" என்றான் பிரகாஷ்.

"ஏன்டா?"

"எக்ஸாம் பக்கத்துல வந்தாச்சு. நம்ம கவனம் மற்ற விஷயத்துல சிதறாம இருக்கணும்."

விஜய்க்குத் திகைப்பாக இருந்தது. "அது எப்படி பிரகாஷ் பார்க்கணுங்கற ஆர்வம்கூட இல்லாம உன்னால இருக்க முடியுது?" என்று கேட்டான்.



"ஏன் முடியாது? மனசுல சுயக்கட்டுப்பாடு இருந்தா நிச்சயமா முடியும். ரசிப்பு வேற; அடிமைத்தனம் வேற. சும்மா இருக்கறப்ப பொழுதுபோக்கா பார்க்கறது ரசிப்பு. எந்த வேலையா இருந்தாலும் ஒதுக்கி வெச்சிட்டுப் பார்க்கறது அடிமைத்தனம். எதிலும் ரசிப்பு இருக்கலாம். அடிமைத்தனம் கூடாது. நான் ரசிகன்தானே தவிர அடிமை இல்லை" என்றான் பிரகாஷ்.

விஜய்க்கு உண்மை புரிந்தது. "பிரகாஷ், நான் இங்கே வந்தது ரொம்ப நல்லதா போச்சு. வா ரெண்டு பேருமா சேர்ந்து படிப்போம்" என்றான்.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

ஓவியப் போட்டி, பொது அறிவுப் போட்டி, அனுபவங்கள், துணுக்குகள், படக்கதைகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்குச் சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....


முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



புதிர் உலகம்

எத்தனை ஆண், எத்தனை பெண்?

(I) என் தம்பி பிறந்தது பிப்ரவரியில். இந்த ஆண்டையும் சேர்த்து அவன் பிறந்தது முதல் இதுவரை பிப்ரவரிக்கு நான்கு முறை 29 நாட்கள் வந்துவிட்டது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிப்ரவரிக்கு 29 நாட்கள் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். அப்படியானால் இந்த பிப்ரவரியில் என் தம்பிக்குக் குறைந்த பட்சம் எத்தனை வயது பூர்த்தியாகி இருக்கும்?

- மு. அகமது ஆதில்,
பள்ளங்கோயில்

(II) சுந்தர் இரண்டாம் வகுப்பில் படிக்கிறான். அவன் தங்கை கீதா முதல் வகுப்பில் படிக்கிறாள். ஒருநாள் சுந்தர் தன் சிலேட்டுப் பலகையில் '1 முதல் 100 வரை' வீட்டுக்கணக்கு எழுதி வைத்திருந்தான். அவன் வெளியில் போன சமயம் பார்த்து, கீதா பலகையை எடுத்து 'ஒன்று' என்ற எண்களையெல்லாம் அழித்து விட்டாள். பாவம் சுந்தர் மறுபடியும் எழுத வேண்டி இருந்தது. எத்தனை முறை 'ஒன்று' என்ற எண்ணை எழுத வேண்டியிருந்தது எனக் கூறுங்கள் பார்க்கலாம்!

- ஆர். ராஜலட்சுமி,
கரூர்.

(III) கீழே உள்ள புதிர் கட்டங்களைப் பாருங்கள். இதை எந்தப் பக்கம் எந்த எண்ணைப் போட்டுக் கூட்டினாலும் 120, 150, 90 வர வேண்டும்.

- செ. சுபா, ஒன்பதாம் வகுப்பு,
உமா மகளிர் உயர்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை

40		20
	50	
20		60

(IV) வானில் கிளிகள் பறந்து சென்றன. அதில் ஒரு கிளி சொன்னது 'என் பின்னால் 5 கிளிகள் வருகின்றன' என்று. மற்றொரு கிளி சொன்னது 'என் பின்னாலும் 5 கிளிகள் வருகின்றன' என்று. இதேபோல் பறந்து சென்ற ஒவ்வொரு கிளியும் சொன்னது. ஏன்?

- வே. சுபஸ்ரீ, பத்தாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, நல்லூர்.

(V) என்னிடமும் அக்கா எழிலிடமும், அண்ணன் பொழிலிடமும் ஆளுக்குக் கொஞ்சம் ரூபாய் இருந்தது. என்னிடம் இருப்பது போல் அக்கா எழிலிடம் இரண்டு மடங்கு ரூபாய் இருக்கிறது. பொழிலிடம் மூன்று மடங்கு ரூபாய் இருக்கிறது. எங்கள் மூவர் ரூபாயைக் கூட்டினாலும் மூவர் ரூபாயைப் பெருக்கினாலும் ஒரே தொகைதான் வரும். எங்கள் மூவரிடமும் தனித்தனியே எவ்வளவு




ரூபாய் இருக்கிறது?

- கி. சிந்து, மயிலாடுதுறை

(VI) 6. "உங்கள் வீட்டில் எத்தனை ஆண், எத்தனை பெண் இருக்கிறார்கள் என்பதை நீ சொல்லாமலேயே என்னால் தெரிந்து கொள்ள முடியும்" என்றான் சுரேஷ்.

"எப்படி?" என்றான் ரமேஷ்.

"உங்கள் தாய் தந்தை 2 பேர்."



"ஆமாம்."

" அந்த இரண்டுடன் உங்கள் வீட்டில் உள்ள ஆண் பிள்ளைகளைக் கூட்டிக் கொள்."

"சரி."

"அதை இரண்டால் பெருக்கிக் கொள்."

"பெருக்கிக் கொண்டேன்."

"அந்தத் தொகையுடன் ஒன்றைச் சேர்த்துக் கொள்."

'சரி"

"அதை ஐந்தால் பெருக்கிக் கொள்."

"பெருக்கியாச்சு"

"அதனுடன் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்."

"கூட்டியாச்சு."

"அதைப் பத்தால் பெருக்கிக் கொள்."

"பெருக்கிக் கொண்டேன்."

"இப்போது மொத்தம் எவ்வளவு?"

"770"

"உங்கள் வீட்டில் 5 ஆண் குழந்தைகள், 2 பெண் குழந்தைகள். சரிதானே..." "ஆமாம்!"

- ஆ. மலர்தாசன், விருத்தாசலம்

புதிர் விடைகள்

(I) 16 வயது என்றுதானே நினைத்தீர்கள்! தவறு. என் தம்பிக்கு 12 வயதுதான் பூர்த்தியாகி இருக்கிறது. அவன் பிறந்தது பிப்ரவரி 1992-ல்

(II) 21 முறை

(III)

40	60	20	120
30	50	70	150
20	10	60	90
90	120	150	

(IV) சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை.

(V) 1+2+3=6 ரூபாய்
1×2×3= 6 ரூபாய்.
என்னிடம் 1 ரூ. எழிலிடம் 2 ரூ. பொழிலிடம் 3 ரூ.

(VI) கடைசியாக 10 ஆல் பெருக்கி வரும் தொகையில் (எந்தத் தொகையாக இருந்தாலும் சரி) 250ஐ கழித்து விட வேண்டும். கழித்ததில் முதல் எண் ஆண், இரண்டாவது எண் பெண். பூஜ்யத்தைக் கண்டு கொள்ள வேண்டாம்.

770 – 250 = 250

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 தூ	த்	2 து	க்	3 கு	டி	■	4 கா	5 சி
ர	■	ம்	■	ற	■	டு	■	த்
ம்	■	பி	■	ள்	■	6 கா	ந்	தி
■	தி	■	■	■	ளி	■	■	ர
ம்	7 ச	ஞ்	8 வ	■	9 வா	ன	10 ர	ம்
ய	■	■	ரி	■	■	■	சி	■
11 சி	ற	12 கு	■	யா	■	13 கோ	■	ம்
ல்	■	லை	■	ரி	■	ல	■	க
14 கா	லை	■	ரி	15 யூ	கி	ம்	ட	16 மே



நாடக அரங்கம்!

மேப் வரைவோமா?


ஸ்நேகா





பகடை விளையாட்டில் மேப் எப்படி செயல்படுகிறது என்று பார்த்தோம். மேடை நாடகங்களில் கூட மேப் எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்க்கலாம். மேடை நாடகங்களில் நாடகத்தின் பின்னணியைத் திரையில் வரைந்திருப்பார்கள். அந்தப் பின்னணிக்கு ஏற்றவாறு நாற்காலி, மேஜை மற்றும் பல பொருட்களை வைத்திருப்பார்கள். நடிகர்கள் எப்படி நடிக்க வேண்டும்? யார் முதலில் போவது என வரிசையாக சீன்கள் அமைக்கப்பட்டிருக்கும். நடிப்பையும் நாடக மேடையையும் இணைத்து முதலில் ஒரு பிளான் உருவாக்குவார்கள். இதுவே மேப்.

ஒரே மேடையில் ஒரே நேரத்தில் இரண்டு காட்சிகளைக் கூட மேடை நாடகத்தில் காட்ட முடியும். ஒரு மேஜை என்றால் அதில் பாதி வேறு நிறமாகவும், மீதி வேறு நிறமாகவும் அமைப்பர். இப்படி ஒவ்வொரு பொருளையும் இரண்டு காட்சிகளுக்கும், நிறத்தின் அடிப்படையில் பிரித்து வெவ்வேறு இடங்களில் நடப்பதாகக் காட்ட முடியும். பொதுவாகப் பார்த்தால் ஒரே வீடு போல் தெரியும்.

உங்கள் அறையை கிராஃப் பேப்பரில் வரைவோமா? கிராஃப் பேப்பர், பென்சிலை எடுத்துக் கொள்ளுங்கள். கைகளை விரித்து, விரல்களால் அறையை அளக்கவும். ஒரு சாண், கிராஃப் பேப்பரில் ஒரு கட்டம். இப்படி அறையின் சுவர், கதவு, ஜன்னல் ஆகியவற்றை அளந்து கிராஃப் பேப்பரில் பென்சிலால் குறித்துக் கொள்ளுங்கள். பிறகு சுவர், கதவு, ஜன்னல் என எழுதுங்கள். உங்கள் அறையில் இருக்கும் மேஜை, நாற்காலி, கட்டில் போன்றவற்றையும் குறிப்பிடுங்கள். இப்படி ஒரு வீட்டைக் கூட நீங்கள் கிராஃப் பேப்பரில் வரையலாம்.








விவாத மேடை

சிக்கனமா, தூய்மையா?



ப்ரியா கடைக்குச் சென்று விட்டு திரும்பிக் கொண்டிருந்தாள். விவேக் தன் வீட்டு வாசலில் சிறுவர்களுக்குப் பேனாக்களை வழங்கிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த ப்ரியா, சைக்கிளை நிறுத்தி விட்டு, அவன் வீட்டுக்குள் நுழைந்தாள்.

"என்ன, இன்னிக்கு கை நிறைய கலர் கலரா பேனாக்களை வச்சிக்கிட்டு வாரி வழங்கிட்டிருக்கே? எனக்கும் ரெண்டு பேனா கொடு விவேக்" என்றாள் ப்ரியா.

"ப்ரியா, நல்லா ஏமாந்து போயிட்டே. இது ரீஃபில் தீர்ந்த பேனா.

"ரீஃபில் தீர்ந்தால் வேற ரீஃபில் வாங்கிப் போடறதுதானே?"

"இது ரீஃபில் மாற்ற முடியாத ஒன்ஸ் யூஸ் பேனா."

"இதையெல்லாம் என்ன பண்ணுவே?"

"ம்... குப்பையில தூக்கிப் போடுவேன்."

"அடப்பாவி, குப்பையிலேயா?"

"ஒரு ரூபாய்க்கு ஒரு பேனா. ரீஃபில் மாத்தற பேனா வாங்கற காசுக்கு இதில் 4, 5 பேனாக்களை வாங்கிவிடலாம். அதுவுமில்லாமல் பேனாக்களை அடிக்கடி மாற்றுவதால் போர் அடிக்காது இல்லையா? யோசிச்சுப் பாரு. எவ்வளவு விஷயங்கள் அடங்கியிருக்கு!"

"நீ சொல்ற விளக்கமெல்லாம் சரி தான். ஆனால் சுற்றுப்புறத் தூய்மைக்குக் கேடு விளைவிக்கிறேங்கிறது புரியுதா?"

"ப்ரியா, சும்மா ஏதாவது சொல்லாதே! நான் என்ன இந்தப் பேனாக்களைத் தூக்கி நெருப்பில் போடப் போறேனா? அப்படி போட்டால் பிளாஸ்டிக் உருகி காற்றில் கலக்கும்போது காற்று மாசுபடும். நான் குப்பையில் தானே தூக்கிப் போடறேன்!"

"குப்பையில தூக்கிப் போடறதும் சுற்றுப் புறத்துக்குக் கேடுதான்."

"எப்படி ப்ரியா?"

"நீ ஒரு வருஷத்துக்கு 24 பேனா உபயோகிக்கிறேன்னு வச்சுக்கலாம். ரீஃபில் மாற்றக் கூடிய பேனா ஒண்ணு வாங்கினால் பத்திரமாக வச்சுக்கிட்டால், ஒரு வருடத்துக்கு ரீஃபிலை மாற்றி, மாற்றி பயன்படுத்தலாமே! இந்த 24 பேனாக்களையும் மண்ணில் தூக்கி எறியும்போது அவை மட்காது. ஆண்டாண்டு காலத்துக்கும் மட்காமல் அப்படியே மண்ணில் புதைந்து இருக்கும். பூமியில் விழும் எந்தப் பொருளும் மட்கிப்போனால்தான் பூமிக்கு நல்லது. இப்ப புரியுதா?"


"பூமிக்கு நல்லதுதான். பொருளாதாரத்துக்குத்தான் இழப்பு" என்றான் விவேக்.

ப்ரியா சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

இந்த விவாதத்தைப் பற்றி உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். சிறந்த கருத்துகள் கோகுலத்தில் பிரசுரமாகும். சன்மானமும் உண்டு.

- தம்பிப் பயல்

செவ்வாய்க் கிரகத்தில் உப்பு!



• ரோவர்

செய்தி நேரம்

பனிப் பிரதேசம்!

பூமியில் பல தரப்பட்ட வெப்ப நிலை காணப்படுகிறது. கிரீன்லாந்து போன்ற பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு தட்ப வெப்பம் மாறுபட்டுள்ளது. குறிப்பிட்ட காலத்துக்குக் குளிர் அதிகரிப்பதும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு வெப்பம் அதிகரிப்பதும் சுழற்சியாக நடைபெற்று வருகிறது. வெப்பம் அதிகரிப்பதால் சுரியமிலவாயும் அதிகரிக்கிறது. இதனால் தட்பவெப்ப மாற்றம் நிகழ்கிறது. இந்தியாவில் தென் பகுதியில் வெப்பம் அதிகமாகவும், வட பகுதியில் குளிர் அதிகமாகவும் இருந்து வருகிறது. 2010ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை இந்தியாவில் குளிர் அதிகரிக்கும்.

தேர்தல்


வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நாடு முழுவதும் அரசியல் தலைவர்கள் களத்தில் இறங்கி விட்டனர். சோனியாகாந்தி சாலையோரப் பிரசாரத்தை மேற்கொண்டிருக்கிறார். அத்வானி ரத யாத்திரை செய்கிறார். தமிழ்நாட்டில் கூட்டணி மாறினாலும் எல்லா கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளன. மே மாதம் வரை இந்த அலை ஓயாது.

செவ்வாய்க் கிரகத்தில் உப்பு

செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருந்ததற்கான ஆதாரங்களை ரோவர் ஆய்வு விண்கலம் தெரிவித்துள்ளது. ரோவர் விண்கலம் செய்வாய்க் கிரகத்தில் உள்ள எரி மலைக்கு அருகே தரையிறங்கி ஆய்வு நடத்தி தகவல்களை அனுப்பியுள்ளது. இந்த எரிமலையின் மீதுள்ள படிவங்கள் காற்றினால் ஏற்பட்டதா அல்லது மலையின் மீது வழிந்தோடிய நீரினால் ஏற்பட்டதா என்பது குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றனர். செவ்வாய்க் கிரகத்தில் சாம்பநிற படிவங்களுக்கு அடியில் உறைந்த நிலையில் நீர் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே நுண்ணுயிர்கள் இருக்கக்கூடும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர் விஞ்ஞானிகள். இது தவிர உப்புப் படிவங்களும் பல இடங்களில் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் செவ்வாய் கிரகத்தில் உயிர் வாழ்வதற்கான சூழல் இருந்துள்ளது. தற்போது உயிரினங்கள் வாழ்வதற்கான சூழல் எதுவும் இருப்பதற்கான தடயங்களை ரோவர் விண்கலம் அனுப்பவில்லை என நாசா தெரிவித்துள்ளது.

ஓவியப் போட்டி

கொண்டைச் சேவல், கோழி, குஞ்சுகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு இவைதான். உங்கள் கற்பனை குதிரையைத் தட்டி விட்டு, வண்ணத்தில் படங்களை வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி: 8.4.2004



தாகம் தீர்க்கும் தென்னை




முதல் பரிசு : ஆர். பெருமாள்,
பதினோராம் வகுப்பு, நீலாம்பாள்
சுப்பிரமணியம் மேல்நிலைப் பள்ளி,
சேலம்




இரண்டாம் பரிசு
எஸ். ஜெயபால், பதினோராம்
வகுப்பு, நீலாம்பாள் சுப்பிரமணியம்
மேல்நிலைப் பள்ளி, சூரமங்கலம்,
சேலம்

மரங்கள்!



வண்ணத் தூரிகை
முடிவு

மார்ச் இதழில் 'தென்னை மரங்கள்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



மூன்றாம் பரிசு :
சேவியர் இன்ஃபேண்ட் ராஜ்,
புனித பிரிட்டோ மேல்நிலைப் பள்ளி,
ஞானஒளிவுபுரம், மதுரை




ஆறுதல் பரிசு :

எஸ். வரலக்ஷ்மி,
ஐந்தாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி



ஆறுதல் பரிசு :

எஸ். டேனியல் லியோ பிரபு,
எட்டாம் வகுப்பு,
புனித பிரிட்டோ மேல்நிலைப் பள்ளி,
ஞானஒளிவுபுரம், மதுரை



ஹலோ சுகமா?

குடல் புழு எப்படி உருவாகிறது?

● மு. முத்துவேல் பாண்டியன், நாகர் கோயில்


? எண்டோஸ்கோப்பி, லேப்ரோஸ் கோப்பி இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

! எண்டோஸ்கோப்பி என்பது அறுவை சிகிச்சை செய்யாமல் இயற்கையாக உடலில் அமைந்திருக்கும் துவாரங்கள் வழியாக நம் உடல் உறுப்புகளையும் அவற்றில் உள்ள நோய்களையும் கண்டறிய உதவும் ஓர் உள்நோக்கல் கருவி. முக்கிய மாக வாய், உணவுக்குழாய், இரைப்பை, முன்சிறுகுடல், ஆசனவாய், பெருங்குடல் போன்ற செரிமான மண்டல உறுப்புகளில் ஏற்பட்டிருக்கும் நோய்களை எண்டோஸ் கோப்பி கருவி மூலம் நேரில் காணலாம். தவிர, மூக்கு, காது, நுரையீரல், பிறப்பு உறுப்புகள், கருப்பை ஆகியவற்றையும் இதன் வழியாகக் காணலாம். லேப்ரோஸ் கோப்பி என்பது செயற்கையாக உடலில் சில துளைகளைச் செய்து, அங்குள்ள உறுப்புகளை நேரில் காண்பது. குறிப்பாக வயிறு, மார்பு, முதுகு, மூட்டுகளை இதன் மூலம் காணலாம்.


● தி.சே. அறிவழகன், திருப்புலிவனம்

? குழந்தைகளுக்கு அடிக்கடி குடல்புழுத் தொல்லை ஏற்படுகிறதே ஏன், டாக்டர்?

! குழந்தைகளுக்கு அடிக்கடி குடல் புழுத் தொல்லை ஏற்படுவதற்கு முக்கியக் காரணம் உடல் சுத்தக் குறைவும் சுற்றுப் புறச் சுகாதாரக் குறைவும்தான். இந்த இரண்டையும் சரி செய்துவிட்டால் போதும். குடல்புழுத் தொல்லை மீண்டும் மீண்டும் தலைகாட்டாது. முக்கியமாக, குழந்தை களின் விரல் நகங்களை வெட்டி சுத்தமாகப் பராமரியுங்கள். விரல் சூப்பும் பழக்கத்தைத் தவிர்க்க முயலுங்கள். மலம் கழித்த பின்பு ஆசன வாயையும் கைகளையும் சோப்புப் போட்டு நன்றாகக் கழுவச் சொல்லுங்கள். காலணி இல்லாமல் கழிப்பறையைப் பயன்படுத்தக் கூடாது. தெருக்களில் திறந்தவெளிக் கழிப்பிட மாகப் பயன்படுத்தும் இடங்களிலும் குழந்தைகள் விளையாடக் கூடாது. திறந்து வைக்கப்பட்ட, ஈ மொய்த்த உணவுப் பண்டங்களைச் சாப்பிடக் கூடாது. குடிநீரைக் கொதிக்க வைத்துப் பயன் படுத்த வேண்டும். காய்கறிகள் மற்றும் பழங்களைச் சாப்பிடப் பயன்படுத்தும் முன்பு அவற்றை நன்கு கழுவி சுத்தப் படுத்த வேண்டும். மூன்று மாதங் களுக்கு ஒரு முறை குடல் புழு வுக்கு மருந்து சாப்பிடவேண்டும்.



● எண்டோஸ்கோப்பி




● லேப்ரோஸ்கோப்பி

● ஜி. ராஜேஸ்வரி, காஞ்சி புரம்

? பித்தப்பையில் கற்கள் உருவாவது எப்படி? இதற்கு என்ன சிகிச்சை?

! உணவு செரிமானத்திற்காகக் கல்லீரல் பித்த நீரைச் சுரக்கிறது. இதைப் பித்தப்பை வாங்கி சேமித்து வைக்கிறது. நாம் சாப்பிடும் உணவிலும் ரத்தத்திலும் கொழுப்பு அதிகமாகிவிட் டால் இந்தப் பித்தநீர் கட்டியாகி கற்களாக உருமாறிவிடும். சில பாக்டீரியாக் கிருமிகள் பித்தப்பையைத் தாக்கும்போது அங்கு



ஆறுவதற்குக் கால தாமதம் ஆகலாம். ஆகவே, இது நல்லதல்ல. சுத்தமான துணி அல்லது பஞ்சு கொண்டு காயத்தைத் துடைத்து, துணிக்கட்டு போட்டுக் கொள்வது நல்லது. காயம் பெரிதாக இருந்தாலோ, வலி இருந்தாலோ மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

அழற்சி ஏற்பட்டு பித்தக்கற்களை உருவாக்கிவிடும். பித்தநீர் பித்தப்பையிலிருந்து சரியாக வெளியேற இயலாமல் அடைப்பு ஏற்படுமானால் பித்தநீர் தேங்கி, கற்களாக மாறிவிடும். சில மருந்துகளின் பக்கவிளைவாகவும் பித்தக் கற்கள் உருவாவது உண்டு. அடிக்கடி விரதம் இருந்தாலும் பித்தக் கற்கள் உருவாக அதிக வாய்ப்பு உண்டு. பித்தக்கற்களைக் கரைக்க மருந்துகள் உள்ளன. பித்தப்பைகள் அதிர்வலைகளைச் செலுத்திக் கற்களைப் பொடியாக்கி வெளியேற்றலாம். கற்களின் எண்ணிக்கை அதிகமென்றால் அறுவை சிகிச்சை தேவைப்படும். கொழுப்பு உணவுகளைக் குறைத்து, நார்ச்சத்து நிறைந்த உணவுகளை அதிகப்படுத்தினால் பித்தக் கற்கள் உருவாகாது. தினமும் உடற்பயிற்சி அல்லது நடைப் பயிற்சி செய்ய வேண்டியதும் முக்கியம்.

● **வே. மணிமேகலை, திருச்சி**

? வீட்டில் எங்களுக்கு ஏதாவது காயம் ஏற்பட்டுவிட்டால் என் அம்மா உடனே வெண்ணெய் அல்லது தோசை மாவு பூசிவிடுவார். இது சரியில்லை என்கிறாள் என் தோழி. உங்கள் கருத்து என்ன டாக்டர்?

! உன் தோழி கூறுவதுதான் சரி, மணிமேகலை. காயங்களில் வெண்ணெய், தோசை மாவு போன்றவற்றைப் பூசும்போது அவை பாக்டீரியாக் கிருமிகள் வளர்வதற்கு நல்ல உணவாகிவிடும். இதன்மூலம் கிருமிகள் வளர்வதற்கு நாமே வழி செய்து கொடுத்து விடுகிறோம். இதனால் காயம்

புதிர் இங்கே! விடை கீழே!

1. எந்த உறுப்பு பாதிப்பதால் அம்மைக் கட்டு ஏற்படுகிறது?
   - அ. கன்னம்
   - ஆ. உமிழ்நீர்ச் சுரப்பி
   - இ. தாடை எலும்பு

2. இதயமாற்று அறுவை சிகிச்சையை முதன் முதலில் செய்தவர் யார்?
   - அ. ராபர்ட் பிரௌன்
   - ஆ. ஜூலியன் ஹெக்ஸிலி
   - இ. கிருஷ்டியன் பர்னாட்

3. தலைமுடி உதிர்வதற்கு எது முக்கியக் காரணம்?
   - அ. ரத்த சோகை
   - ஆ. பேன்
   - இ. பொடுகு

4. மனித மூளையின் நிறம் என்ன?
   - அ. ஊதா நிறம்
   - ஆ. வெள்ளை நிறம்
   - இ. சாம்பல் நிறம்

5. சர்க்கரை நோய் எதனால் ஏற்படுகிறது?
   - அ. ரத்தக்குறைவு
   - ஆ. இன்சுலின் குறைவு
   - இ. கால்சியம் குறைவு

விடைகள்:
1. ஆ 2. இ 3. அ 4. அ 5. ஆ

❖ டாக்டர் கு.கணேசன் ❖



மர்மப் பெண் கொடுத்த

காட்சி 1

சாதிக் : 'கெய்ரோ' நகர நுழைவாயில்களைக் காவல் காப்பவன்.

காஜி : எகிப்து தேசத்தின், மிகப் பெரிய பணக்கார வியாபாரி.

சாதிக் : அல்லா என்றுதான் எனக்கு நல்ல வழி காட்டப் போகிறாரோ தெரியவில்லை. ஐயோ, என்ன இது? ஏதோ மூட்டை போல் சிறியதாக இருக்கிறதே! அல்லா, என் கண்களை நம்ப முடியவில்லையே. அத்தனையும் பொற்காசுகள். யார்? யார் இதை இங்கு போட்டது?

(மறுநாள்)

சாதிக் : ஐயோ என்னது? இன்றும் பொற்காசுகள் நிறைந்த பை கிடக்கிறதே? (அப்பொழுது ஒரு பெண்ணின் சிரிப்புக் குரல் கேட்டது.)

சாதிக் : யாரது? யார் சிரித்தது?

(சிரிப்பு பலமாகக் கேட்டது)

சாதிக் : ஏய் பெண்ணே, என்ன தைரியம் உனக்கு? ஊர்ப் பெரியவரான காஜியிடம் உன்னை இழுத்துச் செல்வேன்.

மர்மப்பெண் : ஐயோ, அப்பாவி காவல்காரரே, பயப்படாதீர்கள். அந்தப் பொற்காசுகளை இங்கு போட்டது நான்தான்!

சாதிக் : எனக்கு எதற்காக கொடுக்க வேண்டும்?

மர்மப்பெண் : நீங்கள் எவ்வளவு நல்லவர் என்று தெரிந்து கொண்டேன். நீங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் என்று நான்தான் பார்த்தேனே.

சாதிக் : ம்... யாருக்குத் தெரியும் நான் கஷ்டப்படுவது? உலகத்திலேயே, காவல்காரன் வேலைதான், மிகவும் கஷ்டமானது தெரியுமா?

மர்மப்பெண் : ஐயா, கவலைப் படாதீர்கள். இந்த ஊரில் பெரிய தனவந்தர் காஜி இருக்கிறார் அல்லவா?

சாதிக் : இருக்கிறார். அதற்கென்ன இப்பொழுது?

மர்மப்பெண் : நாளை இரவு தனவந்தர் காஜியின் வீட்டிற்கு முன்னால், நான் மயங்கிக் கிடப்பேன். அப்பொழுது, நீங்கள் என்னைப் பார்த்துவிட்டு, தனவந்தரின் காவல்காரர்களை அழைத்து வர வேண்டும். அவர்கள் என்னைத் தூக்கிக் கொண்டு, வீட்டினுள்ளே செல்லும்படி செய்ய வேண்டும். புரிகிறதா? நீங்கள் இதைச் செய்தால், இன்னும் அதிக காசு கொடுப்பேன். இல்லையென்றால்...

சாதிக் : இல்லையென்றால்...?

மர்மப்பெண் : என் பொற்காசுகளை நீர் திருடிவிட்டீர் என்று புகார் கூறுவேன். அப்புறம் உங்கள் இஷ்டம்.

சாதிக் : என்ன செய்ய வேண்டும் கூறு?

மர்மப்பெண் : அவர்கள் என்னைச் சிறைச்சாலையில் அடைக்க வேண்டும் என்று



கூறும்பொழுது, நான் போட்டிருக்கும் நகைகளையும், விலை உயர்ந்த ஆடைகளையும் காண்பித்து நான் ஒரு அரச பரம்பரை பெண்ணாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறினால் போதும்.

சாதிக் : சரி, அப்படியே கூறுகிறேன். ஏதாவது தொல்லை

பொற்காசுகள்!

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி

வந்தால், நீதான் காப்பாற்ற வேண்டும்.

காட்சி 2

சாதிக் : காவலாளிகளே ஓடி வாருங்கள்! இங்கு ஒரு பெண் விழுந்து கிடக்கிறாள்.

காவலாளி 1 : யார் இந்தப் பெண்?

காவலாளி 2 : அண்ணே, யாராக இருந்தால் என்ன? தூக்கிச் சிறைச்சாலையில் போடுவோம்!

சாதிக் : என்னப்பா நீங்கள் புரியாமல் பேசுகிறீர்கள்.



இந்தப் பெண்ணின் உடைகளையும், நகைகளையும் பார்த்தால், ராஜவம்சத்து பெண்ணாகத் தெரிகிறாள். பார்த்துச் செய்யுங்கள்.

காவலாளி : அண்ணே, வீண் வம்பை விலைக்கு வாங்க வேண்டாம். நாளை இவள், நன்றாகத் தெளிவு பெற்றபின் தன் பெயரைக் கூறினால், நம் கதி அதோ கதிதான்.

சாதிக்: இதில் என்னப்பா குழப்பம்? இவளை இன்றிரவு காஜி ஐயா வீட்டினுள் வைத்து விடுவோம். மறுநாள் காலை அவள் எழுந்து போய் விடுவாள்.

(காஜி இந்தச் சத்தத்தைக் கேட்டு மாளிகையிலிருந்து வெளியே வந்தான்)

காஜி : இங்கு என்ன நடக்கிறது? *(அந்தப் பெண்ணைப் பார்த்தான். சாதிக் நடந்ததைக் கூறினான்.)*

காஜி : சரி, இவளை இந்தச் சிறிய அறையில் வைத்து பூட்டி விடுங்கள், காலையில் வெளியில் விடலாம்.

சாதிக் : ஐயா, எதற்காகப் பூட்ட வேண்டும்...? நன்றாக மயங்கிக் கிடக்கிறாள். எங்கு போய்விட முடியும்?

காஜி : ம்... அதுவும் சரிதான். காலையில் பார்த்துக் கொள்ளலாம். காவலாளிகளே, பூட்ட வேண்டாம். நீங்கள் போகலாம். (தனக்குள்) ம்... இவளைத் தேடும் இவளுடைய பெற்றோரிடமிருந்து, பணம் பெறலாம்.

காட்சி 3

(மறுநாள் காலை காஜி மர்மப்பெண் இருக்கும் அறைக்கு வந்தான். அறையில் யாருமில்லை.)

காஜி : எங்கே அவள்? *(ஓடிச் சென்று பெட்டிகளைத் திறந்து பார்த்தான்.)* ஐயோ, இது எப்படி சாத்தியம்? எல்லாம் காலியாக இருக்கிறதே. ஒரு பெண் எப்படி இத்தனை நகைகளையும் பணத்தையும் திருட முடியும்? (யோசித்தான்). ஆஹா... சாதிக்!



அவன்தான் இந்தப் பெண்ணுக்குத் துணை. சாதிக்... உன்னை என்ன செய்கிறேன் பார்!

(சாதிக் காவலாளிகளால் இழுத்து வரப் பட்டான்.)

சாதிக் : ஐயோ, என்னை விடுங்கள். எனக்கு ஒன்றும் தெரியாது. நான் ஒரு அப்பாவி.

காஜி : அப்பாவியா? நீயா? ஏய் குள்ள நரியே, எங்கே அவள்? சொல், இல்லை யென்றால்... காவலாளிகளே, இவனுக்கு நூறு கசையடி கொடுங்கள்.

(காவலாளிகள் சாட்டையைச் சொடுக்கி சாதிக்கின் அருகில் சென்றனர்.)

சாதிக் : ஐயா, என்னைக் காப்பாற்றுங்கள். ஒரு வாரம் அவகாசம் தாருங்கள். நான் எப்படியாவது கண்டுபிடிக்கிறேன்.

காஜி : அப்படி அவள் கிடைக்கவில்லை என்றால்?

சாதிக் : என் தலையை வெட்டி விடுங்கள் ஐயா.

காஜி : சரி, நீ சொல்வது போல் செய்து காட்டு. என்னிடம் இருந்து தப்பலாம் என்று நினைக்காதே.

காட்சி 4

சாதிக் : நான் ஏமாந்துவிட்டேன். என் தலை வெட்டப்படும்.

மர்மப்பெண் : ஐயா, காவலாளியே, நான் வந்துவிட்டேன்.

சாதிக் : அடிப்பாவி! நீ நன்றாக இருப்பாயா? பொற்காசுகளைக் காண்பித்து என்னை ஏமாற்றி விட்டாயே.

மர்மப்பெண் : ஐயா, பொறுமையாகக் கேளுங்கள். என் பெயர் நாதிரா. சில வருடங்களுக்கு முன் என் தந்தையை வெட்டி சாய்த்துவிட்டு, எங்கள் சொத்தை சூறையாடிச் சென்றான் அந்த காஜி. அவனைப் பழி வாங்கவே, இதைச் செய்தேன்.

சாதிக் : அடப்பாவமே! அதெல்லாம் சரிதான். ஒரு பாவமும் அறியாத நான் மாட்டிக் கொண்டேனே.

மர்மப்பெண் : ஐயா, உங்களைக் காப்பாற்றவே வந்திருக்கிறேன்.

சாதிக் : சரி, சீக்கிரம் சொல்! நான் எப்படி தண்டனையிலிருந்து தப்புவது?

மர்மப்பெண்: நீங்கள் காஜியிடம் சென்று, ஐயா நான் இந்த நாட்டின் சுல்தானுடைய பணியாள். அவர் என்னை நகர எல்லைக் காவலாளியாக்கி உள்ளார். சுல்தானைக் கேட்காமல் என்னைத் தொட்டால், சுல்தானின் கோபத்துக்கு உள்ளாவீர்கள் என்று கூறுங்கள் போதும். நீங்கள் தப்பி விடுவீர்கள். *(பிறகு காதில் ஏதோ கூறினாள்)*

சாதிக் : அப்படியே செய்கிறேன் பெண்ணே, நன்றி.

காட்சி 5

(மறுநாள் சாதிக் தன்னுடன் சுல்தானின் காவலர்களை அழைத்துச் சென்றான்.)

சாதிக் : ஐயா, அந்த மர்மப்பெண்ணை எங்கு தேடியும் கிடைக்கவில்லை. ஏழை நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் உங்கள் தண்டனையை நிறைவேற்றுங்கள். ஆனால் நான் இந்த நாட்டின் ராஜாவான சுல்தானிடம் வேலை செய்பவன். அதனால் அவரிடம் சென்று, இன்று எனக்கு விடுமுறைக் கேட்டேன். அப்பொழுது அவர் இந்தக் காவலாளிகளை அனுப்பினார்.

காஜி : சுல்தானின் காவலாளிகளா? எதற்கு?

சாதிக் : அந்த மர்மப் பெண் இந்த மாளிகையில்தான் இறந்து கிடக்க வேண்டும் என்று சுல்தான் நினைக்கிறார். அதனால் இந்தக் காவலாளிகள் அவள் உடலைத் தேட வந்துள்ளார்கள்.

காஜி : (தனக்குள் - யா அல்லா, இது என்ன புது குழப்பம்? இந்தக் காவலாளிகளை உள்ளே விட்டால், நான் திருடி ஒளித்து வைத்துள்ள சாமான்களைப் பார்த்து விடுவார்கள். பிறகு சுல்தான் என்னைச் சும்மா விடுவாரா?) சாதிக் உன்னை மன்னித்து விட்டேன்.

சாதிக்: நன்றி ஐயா. *(தனக்குள்)* 'மர்மப் பெண்ணே, நீ மிகவும் புத்திசாலி. என்னைக் காப்பாற்றி, உன்னையும் காப்பாற்றிக் கொண்டு, தப்பி விட்டாயே!'


- அரேபிய இரவுகள்


ரோல் மாடல்!

எங்கள் ஆசிரியர்...

எனக்கு மிகவும் பிடித்த மற்றும் மறக்க முடியாத ஆசிரியர் எங்கள் அறிவியல் ஆசிரியர்தான்! மிகவும் அமைதியானவர். எதையும் படபடப்புடன் செய்யக் கூடாது. படிக்கும்போது கால அட்டவணை போட்டு படிக்க வேண்டும் என்று நாங்கள் எளிதில் புரிந்து கொள்ளும்படி சொல்வார். அவர் பாடம் நடத்தும்போது இன்னும் கொஞ்சம் நடத்துவாரா என்று அனைவரும் நினைப்போம். மாணவர்களுக்கு எப்படி சொன்னால் புரிந்து கொள்வார்கள் என்று எங்களின் மன நிலைக்கு தகுந்தாற்போல் பாடம் நடத்தும் பாங்கிற்கு நான் என்றும் தலை வணங்குவேன்.

- வே. சுபஸ்ரீ, பதினோராம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, நல்லூர்





என் மனதில் என்றுமே நீங்கா இடத்தைப் பிடித்திருப்பவர் எட்டாம் வகுப்பில் எங்களுக்குக் கணக்கு வாத்தியாராக இருந்த 'ஆர்தர் சார்'தான். கண்டிப்பையும், கலகலப்பையும் கலந்து அளிப்பதில் அவருக்கு நிகர் யாருமில்லை. ஒவ்வொரு கணக்குக்கும் ஒரு குட்டிக்கதை சொல்லி விளக்கம் தருவார். அதே சமயம் குறைவாக மார்க் எடுக்கும் மாணவர்களையும் 'கவனிக்க'த் தவறமாட்டார். அப்படிப்பட்ட அவருக்கு ரத்தப் புற்றுநோய் இருப்பதும், அதையும் பொருட்படுத்தாமல் எங்களுக்குப் பரீட்சை நேரம் என்பதால் லீவ் போடாமல் பள்ளிக்கு வந்து கொண்டிருக்கிறார் என்பதும் ஒரு நாள் எங்களுக்குத் தெரியவந்தது. மாணவர்கள் அனைவரும் கண் கலங்கி, மனமுருகி இறைவனை வேண்டிக் கொண்டோம். ஆனால், புற்றுநோய் தீவிரமடைந்து அவர் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

- ஆர். பிரசன்னா, கரூர்

ஒரு நாள் நான் வீட்டுப் பாடம் எழுதி வரவில்லை. எனக்குப் பயமாக இருந்தது. ஆனால் ஆசிரியர் என்னை அடிக்கவில்லை. "இத்தனை நாளாக எழுதி வந்தாயே. இன்று ஏதேனும் வேலைகள் அதிகமாக இருந்ததால் எழுதி வந்திருக்கமாட்டாய் என்று எனக்குத் தெரிகிறது. அதனால் நீ நாளை எழுதி வா" என்று அன்புடன் கூறினார். அந்த ஆசிரியர் பெயர் ரமேஷ்.

- உ. பாலமுருகன், ஐந்தாம் வகுப்பு, ஜேக் & ஜில் மெட்ரிக் பள்ளி, கபிஸ்தலம், தஞ்சை

ஆசிரியர் என்றாலே கண்டிப்பானவர் என்று தவறான எண்ணம் மாணவர்கள் மத்தியில் தோன்றிவிடும். ஆனால் எங்கள் ஆங்கில ஆசிரியர், கம்பீரமான தோற்றமும் மிடுக்கான உடையுடன் வந்தாலும் நண்பரைப் போல பழகுவார். பாடங்களை மட்டும் நடத்தாமல் மேலும் பல பொது அறிவு விஷயங்களையும் கூறுவார். வாழ்வில் முன்னேற, சிக்கனமும், சேமிப்பும் எவ்வளவு அவசியம் என்பதையும் சமுதாயத்தில் நம் பங்கு எவ்வளவு தேவை என்று உணரும்படி ரத்த தானம், உடல் தானம் பற்றி எடுத்துரைப்பார். தம் தேவைக்கு மேல் உள்ளதை எளிய மக்களுக்குத் தானம் தரும் ஈகை குணத்தையும் வளர்ப்பார். இவை வெறும் அறிவுரைகளாக மட்டும் இல்லாமல் தம் வாழ்விலும் கடைபிடித்து வருகிறார். நண்பர்களுக்கு ஆடம்பர பரிசுகளை வழங்காமல், நல்ல புத்தகங்களைப் பரிசாக வழங்கும் நல்ல பண்பினைக் கற்று தந்தார்.

- சுமதி, திருப்பத்தூர்.



வாகை சூட வயது தடையில்லை

பிறவிக் கலைஞன் கௌஸ்துப்!

‘‘மேடம்... உங்க பையனுக்கு மற்ற பையன்களோடு வைத்துச் சொல்லித் தர முடியாது. அவன் ராஜதானி எக்ஸ்பிரஸ் வேகத்தில் போறான். அவன் பத்து விரல்களும் கீபோர்டில் விளையாடுவதைப் பார்க்கவே அழகாக இருக்கிறது. இவன் பெரிய கலைஞனாக எதிர்காலத்தில் வருவான்'' என்று சொன்னார் கீபோர்ட் மாஸ்டர் சுந்தர், அம்மா நீடாவிடம். நீடா பையனைப் பெருமையுடன் பார்த்தார். கீபோர்டில் ‘வசீகரா’ என்று வாசித்துக் கொண்டிருந்தான் கௌஸ்துப். தமிழ் சரியாகத் தெரியாவிட்டாலும் பாடல் வரிகளைத் தெளிவாக உச்சரித்தான்.






கொங்கணி குடும்பத்தைச் சேர்ந்தவர் நீடா. இசையில் ஆர்வமுண்டு. மகனை எப்படியாவது இசைத் துறையில் முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்று ஆசைப்பட்டு அதற்கு தகுந்த சூழல் இருக்கும் சென்னையில் வந்து செட்டில் ஆகி விட்டார்; அதுவும் சபாக்கள் கொலுவிருக்கும் மைலாப்பூரில். பி. எஸ். சீனியர் ஸெகண்டரி பள்ளியில் சேர்த்தார்கள். பள்ளியில் சாய்பஜன் சொல்லிக் கொடுத்ததை அப்படியே வந்து வரி மாறாமல் பாடிக் காண்பித்தான் கௌஸ்துப். ஒரு முறை ஷாப்பிங் போகும்போது கையடக்கமான பிளாஸ்டிக் கீபோர்ட் இசை சாதனத்தை கௌஸ்துப்புக்கு வாங்கிக் கொடுத்தார் நீடா. அந்தச் சின்ன, அவ்வளவாக வசதிகள் இல்லாத பிளாஸ்டிக் கீ போர்டில் சாய் பஜன்களுக்கு இசை கூட்டி அசத்தினான் கௌஸ்துப். இதே கலையில் அவனை ஊக்குவிக்கும் பொறுப்பு தனக்கிருக்கிறது என்று உணர்ந்து பெரிய எலெக்ட்ரானிக் கீபோர்டை வாங்கிக் கொடுத்து, கீபோர்டு கற்றுக் கொள்ளவும் ஏற்பாடு செய்தார் நீடா.



லண்டன் டிரினிடி இசைக் கல்லூரியில் பட்டம் வாங்குவது



நன்கு வளர்ந்த
பெங்குவின் 30 கிலோ
எடை வரை
இருக்கும். இவை
மணிக்கு 36 கிலோ
மீட்டர் வேகத்தில்
நீந்தும் திறன் படைத்தவை.

தொகுப்பு:
திருச்சி ராஜி ராதா

என்பது பெருமைக்குரிய ஒன்று. அதற்கு மொத்தம் பத்து கட்டமாகத் தேர்வு நடைபெறும். இப்போது கீபோர்டைப் பொறுத்தவரை எடுத்தவுடன் நான்காவது கட்ட பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறான் கௌஸ்துப். "கௌஸ் எட்டாவது கட்ட பரீட்சைக்குக்கூட போகலாம். அந்த அளவு வாசிப்பு அற்புதமாக இருக்கிறது. ஆனால் தியரி பேப்பருக்குப் படிப்பதற்கு நிறைய இருக்கிறது. எனவே நான்காம் கட்ட பரீட்சைக்கே போகட்டும்" என்று சொல்லி விட்டார் மாஸ்டர் சுந்தர்.

எதையும் 'லபக்'கென்று பிடித்துக் கொள்ளும் புத்தி கூர்மை கௌஸ்துப்புக்கு. சில மாதங்களுக்கு முன்பு உடல்நலமில்லாமல் படுத்துக் கொண்டிருந்தான் கௌஸ்துப். அப்போது கர்நாடக சங்கீதத்தில் வாய்ப்பாட்டு கற்றுக் கொள்ள இசைக்கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரி வெளியிட்டுள்ள காஸெட்டுகளைப் பையனுக்குப் போட்டுக் காட்டினார் நீடா. காய்ச்சலிலிருந்து விடுபட்டு எழுந்த கௌஸ்துப் ஜண்டை, சரளி வரிசை என்ற ஆரம்பப் படிகளையெல்லாம், ஒரே மூச்சில் தாவி வர்ணங்களைப் பிடித்து ஏற்ற இறக்கங்களுடன் பாட, கூடவே கீபோர்டையும் அதற்கேற்ப ஆட்டுவிக்க, அம்மாவுக்கும் தாத்தாவுக்கும் சந்தோஷம் தாங்கவில்லை.


வாய்ப்பாட்டு பயிற்சி காஸெட்டில் எட்டு வர்ணங்களுக்கு மட்டும்தான் நோட்ஸ் இருந்தது. நான்கு வர்ணங்களுக்கு இல்லை. எனவே அதைப் பற்றி விசாரிக்க இசைக் கல்லூரி முதல்வர் ராஜேஸ்வரியைச் சந்தித்திருக்கிறார் நீடா. "பையனைக் கூட்டி வாருங்கள்" என்று சொல்லிவிட்டார். கௌஸ்துப் கர்நாடக சங்கீத வாய்ப்பாட்டை 'கப்'பென பிடித்துக் கொண்டுள்ள வேகத்தைப் பார்த்து அவரும் அசந்து விட்டார். "இவனை மாதிரி ஒரு ஸ்டூடண்ட் இருந்தா எனக்கும் பெருமைதான். இன்னும் கொஞ்ச நாள் ஆகட்டும்" என்று சொல்லியிருக்கிறார் ராஜேஸ்வரி. இப்போது சசி கிரண் நடத்தும் கர்நாடாகாவில் இசைப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறான் கௌஸ்துப்.

இசையில் மட்டுமல்ல, ஓவியம் வரைவதிலும் அசத்துகிறான். அவன் பெயிண்ட் செய்த ஓவியங்கள் நூற்றுக்கணக்கில். அம்மாவுக்கு வீணை கற்றுக் கொள்ள ஆர்வம். அம்மா வாசிப்பதைப் பார்த்து அப்படியே வாசிக்கத் துவங்கி விட்டான் மகன். கீபோர்டில் மேற்கத்திய பீத்தோவனையும், மொஸார்டையும், பிழிந்து தரும்போது, கேட்கும் நமக்கு ஹைட்ரஜன் பலூனில் வாயைப் பிளக்கும் உற்சாகம் உண்டாகிறது. கண்ணை மூடிக் கொண்டு கேட்டால் பக்குவப்பட்ட ஒரு கலைஞனின் வாசிப்பு இது என்றுதான் தோன்றும். இதுவரை நான்கைந்து சோலோ கச்சேரிகள் கொடுத்திருக்கிறான் கௌஸ்துப். அதிலும் குறிப்பாக லைன்ஸ் கிளப்பில் கொடுத்த நிகழ்ச்சிக்கு ஏகப்பட்ட பாராட்டு!

படிப்பிலும் சுட்டி கௌஸ்துப். இப்போது நான்காம் வகுப்பு படிக்கும் கௌஸ்துப், இதுவரை வகுப்புகளில் மூன்று ராங்குகளுக்கு உள்ளேதான் வாங்கிக் கொண்டிருக்கிறான்.

— ப்ரியன்

படங்கள்: மீடியா ராமு



தொடர்களை வென்றவர்கள்!

விளையாட்டு உலகம்

இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையில் டெஸ்ட் மற்றும் ஒரு தினப் போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறுகிறது. நீண்ட காலத்திற்குப் பின் இந்திய அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. இப்போட்டிகளை இரு நாட்டு ரசிகர்களும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

தென்ஆப்பிரிக்கா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே 6 ஒரு தினப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 1 போட்டியில் மட்டுமே தென் ஆப்பிரிக்கா வெற்றி பெற்றது. 5-1 என்ற கணக்கில் நியூஸிலாந்து தொடரைக் கைப்பற்றிக் கொண்டது. ஒரு தினப் போட்டிகளின் பட்டியலில் ஆஸ்திரேலியா முதல் இடத்திலும், தென் ஆப்பிரிக்கா இரண்டாவது இடத்திலும், நியூஸிலாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இலங்கையில் ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கை அணிகளுக்கும் இடையே 5 ஒரு தினப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 3 -2 என்ற கணக்கில் ஆஸ்திரேலிய அணி தொடரை வென்றுவிட்டது.



• ரிக்கி பாண்டிங்



• ஃபிளெமிங்


கருத்து

பட்டாம்பூச்சி ஒரு சி.டி. மாத இதழ். கல்வியின் அவசியத்தை உணர்த்தும் வகையில் 'கருத்து' என்ற தலைப்பில் டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கையை வெளியிட்டிருக்கிறது. வீட்டு வேலைக்காரி மீனாவின் மகள் தீபா. நன்றாகப் படித்துக் கொண்டிருக்கும் தீபா, அவளுக்கும் வேலை கிடைத்துவிட படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் செல்கிறாள். அதனை அறிந்த தீபாவின்ஆசிரியை தீபாவிற்கும் தீபாவின் அம்மாவிற்கும் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். டாக்டர் கலாமின் வாழ்க்கையை முன்னுதாரணமாகக் காட்டுகிறார். அவர் பிறந்த ஊரான இராமேஸ்வரத்திலிருந்து அவர் குடியரசுத் தலைவராகப் பதவியேற்ற டெல்லி வரை அவருடன் பழகிய உறவினர்கள், நண்பர்கள் மூலம் காட்சிகளாக முன் வைக்கப்படுகிறது. அம்மாவிற்கும் கல்வியின் முக்கியத்துவம் புரிகிறது. தீபா பள்ளிக்குச் செல்வதாக உறுதி எடுக்கிறாள். 2020-ல் எல்லோரும் கல்வி பெற்ற நாடாக இந்தியா இருக்க தான் உழைக்கப் போவதாக தீபா குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதுகிறாள். அருமையான தயாரிப்பு.

முகவரி: info@miveli.com

கோகோ

அமைப்பு : விஸ்வேஸ்
படம் : சேகர்





கோகோ வெப்பமும் மழையும் அதிகமாக உள்ள பிரதேசங்களில் நன்கு வளர்கின்றன. ஒன்பது மீட்டர் உயரம் வரை வளரக் கூடியது.

ஒரு மரத்தில் ஆயிரக் கணக்கில் பூக்கள் மலரும். இவற்றில் "பெரும்பாலான பூக்கள் உதிர்ந்து விடும். அடி மரத்திலும் பூக்கும். 20 அல்லது 30 பூக்களே காய்களாக மாறும்.

காய்கள் முற்றிப் பழுத்தவுடன், அவற்றைப் பறித்து உள்ளிருக்கும் விதைகளைச் சேமிப்பார்கள்.



விதைகளை நன்றாகச் சுத்தப் படுத்தி, வாழை இலைகளால் மூடி, விதைகளைக் காய வைப்பர்.

நன்றாகக் காய்ந்த விதைகள் பிரௌன் நிறத்தில் காணப்படும். பிறகு பெட்டிகளில் அடைக்கப் பட்டு தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படும்.

மீண்டும் விதைகள் சுத்தப்படுத் தப்பட்டு, வறுக்கப்படும். வறுத்த விதைகளை உடைத்து, ஓடு வேறு, பருப்பு வேறாகப் பிரித்து இயந்திரத்தில் இட்டு அரைப்பர்.




அரைக்கும்போது பருப்பு இளகும். அதிலிருந்து கோகோ வெண்ணெய் வெளிவரும். இவற்றை மேலும் பக்குவப்படுத்தி கோகோ பவுடராக மாற்றுவர். இதில் பால், சர்க்கரையைச் சேர்த்து சாக்லேட் தயாரிக்கிறார்கள்.

உங்களுக்கு கோகோ பானம் பிடிக்குமா? அல்லது சாக்லேட் பிடிக்குமா? எதுவாக இருந்தாலும் சுவைதானே!


Summer Crash Course (six weeks only) for Level One
ALOHA
MENTAL ARITHMETIC
(Abacus Learning of Higher Arithmetic)
• ஆஸ்திரேலியா • சீனா • இந்தியா • இந்தோனேஷியா • மலேசியா • நியூசிலாந்து • ஓமன் • பிலிப்பைன்ஸ் • சிங்கப்பூர் • தாய்லாந்து
கணிதத்தில் வல்லமை பெறுங்கள்!
கம்ப்யூட்டருக்கே சவால் விடுங்கள்!
The latest ALOHA training, for developing the whole brain at the right age - 5 to 13 years
அபாகஸ் என்றாலே
அலோஹா தான்..!
• 11 ஆண்டுகள்
• 10 நாடுகள்
• 2500 பயிற்சி மையங்கள்
• 25 லட்சம் மாணவர்கள்
ஓர் அறிவுப்புரட்சியை நோக்கி அலோஹா
123 + 456 + 13 - 48 + 534 = ?
12 x 36 - 17 x 15 = ?
6288 + 24 - 13 x 17 = ?
இந்தச் சிக்கலான கணக்கைத் தீர்க்க சிரமப்படுகிறீர்கள் தானே.....!
ஆனால் அலோஹா பயிற்சி மூலம் உங்கள் குழந்தை இந்தக் கணக்குகளை 5 வினாடிக்குள் முடித்துவிடும்
ஒவ்வொரு வார இறுதியிலும் இரண்டு மணிநேரம் மட்டுமே. தினமும் 20 நிமிடங்கள் வீட்டிலேயே சுயமாக பயிற்சி செய்வதன் மூலம் மூன்றாவது மாதத்திலிருந்தே பயன் பெறலாம்.
குழந்தையின் முழுமையான மூளை வளர்ச்சிக்கு சர்வதேச தரத்தில் ஒரு பயிற்சி!
எங்களுடன் கிளை உரிமையாளராய் இணைய
ALOHA INDIA (A Division of KK ACADEMY (P) LTD)
32, 1st Main Road, R.A. Puram, Chennai - 600 028. Phone :044- 24613262 / 6268
Fax: 044-52108090. E-mail: info@alohaindia.com Web: www.alohaindia.com

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05"
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 " Registered as a Newspaper in Srilanka

மனக்கணக்கு மற்றும் அபாகஸ் பயிற்சி



☞ 4 முதல் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் 7 வயதிலிருந்து 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும் தனித் தனியாக பயிற்சி அளிக்கப்படுகிறது.

☞ பயிற்சிக் காலம் 18 மாதங்கள்.

☞ சிறுவர் சிறுமியர் கணிதத்தில் மட்டும் அல்லாமல் அனைத்து பாடங்களிலும் (All Round Academic Excellence) முதன்மையாக விளங்குகிறார்கள்.

☞ மூளையின் வலது பக்கம் இப்பயிற்சியினால் தூண்டப்படுகிறது.

இந்தியா முழுவதிலும் சென்டர்கள்



மேலும் Franchise விபரங்களுக்கு

ஐடியல் பிளே அபாக்கஸ் இந்தியா பி. லிட்.

10, அனுமந்தா ரோடு, ஜிபி சுதர்சன் மேனர்,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

போன் : 2813 3609 / 2813 3608

செல் - 98840 10800/ 10803 /10806 / 47367

Email:contact@playabacusindia.com

IPA